திருஞானமுத்திரை துணை.

தனிப்பா மஞ்சரி.

நூலாசிரியர்

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான்

தென்திருப்பேரை

அபிநவ காளமேகம்

ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார்

அச்சியற்றினோர்

ஸ்ரீவைகுண்டம் வைக்கீல்

(Land lord)

ஸ்ரீமான் பொன்னம்பலநாத முதலியார்.

ஸ்ரீ கான வித்யா பிரஸ்,

ஸ்ரீவைகுண்டம்.

இதன்விலை] 1936. [அணா 8.

முன்னுரை.

'தனிப்பா மஞ்சரி' என்னும் இந்நூல் தென்திருப்பேரை ஸ்ரீ. அனந்தகிருஷ்ண அய்யங்கார் அவர்களால் இயற்றப்பட்டது. இவ்வாசிரியர் அரசர்களால் ஸம்மானம் பெற்றுப் புகழுடன் விளங்கிய புலவர் பரம்பரையில் தோன்றியவர்கள். வடமொழி, தென்மொழி யிரண்டிலும் கவித்திறமை வாய்ந்தவர்கள். இவர்கள் குடும்பத்தைச் சார்ந்த பி. ஸ்ரீ. ஆச்சார்யா முதலிய பலர் தமிழுல கிற்குப் பெருந்தொண்டு புரிந்து வருகின்றார்கள்.

இவ்வாசிரியர் தமது நூலை அச்சியற்றி வெளியிடுதலில் ஊக்கமின்றி வெகுகாலமாக மலைவுற்றிருந்தார்கள். சிலேடை, யமகம், திரிபு முதலிய கவி வகைகளை இக்காலத்து இயற்றுவாரும் அரியர்; அவற்றைப் போற்றுவாரும் இல்லை. ஆகவே யாது செய்வ தென்று வருந்தியிருந்த காலத்து ஒரு சில அன்பர்கள் இப்பாடல் வகைகளைக்கேட்டு, இன்புற்று, இக்காலத்திலும் காளமேகம்போலக் கவி சொல்ல வல்லார் உளராதலைக்கண்டு வியந்து, இவற்றை அச்சிடுமாறு ஊக்கினர். இவ்வன்பர்களுள் ஒருவர் கல்விச்செல்வ மும், பொருட்செல்வமும் ஒருங்கே அமைந்த திருவாளர் பொன்னம் பலநாத முதலியார் அவர்கள். இவர்கள் இந்நூலினை அச்சியற்றி வெளியிடுதற்கு வேண்டும் பொருளையும் தாமாகவே அன்பு கூர்ந்து உதவினார்கள். முதலியாரவர்களது தமிழ்ப்பற்று மிகவும் பாராட்டத் தக்கது.

இத்தமிழ்ப்பா மஞ்சரியை யாவரும் வாசித்து எளிதிற் பொருளுணர்ந்து கொள்ளும்படி ஆசிரியரது தம்பியாராகிய ஸ்ரீ நம்பி ஐயங்காரவர்கள் குறிப்புரை யொன்று எழுதியுள்ளார்கள். இக் குறிப்புரையும் இந்நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பெற்றிருக்கின் றது.

இந்நூலிலுள்ள விசித்திர கவிகளைத் தமிழ்மக்கள் கற்று இன்புறுவாராக.

சென்னை.
25—3—36.

எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ்லெக்ஸிகன் பதிப்பாசிரியர்.

6—5—1935-ல் நடந்த வெள்ளிவிழாவில் இயற்றிய
கமலபந்த வெண்பாவைப் பார்வையிட்ட, திருநெல்வேலி ஜில்லாக்
கலெக்டர் துரையவர்கள் எழுதிய கடிதம்.

Tinnevelly Collectoı's
Banglow
Camp Trichendur.
Dated 13th May 1935

Dear Mr. Ananthakrishna Ayyengar,

Thank you very much for the songs composed by you in commemoration of the Silver Jublee of His Majesty the King Emperor.

Yours sincerely,
(Sd.) D. D. WARREN,

To

Sri Ananthakrishna Ayyangar,
Sri Vanamamalai Madam,
Asthana Vidwan,
Tentiruperai, Trichendur Taluk.

இந்நூலாசிரியர் இயற்றிய பிரபந்தங்கள்.

1. ஸ்ரீபத்மநாபஸ்வாமிபேரில் சந்திரகலாமாலை அச்சிடப்பட்டது
2. திருவரங்கச் சிலேடைமாலை
3. திவ்யதேசப்பாமாலை
4. திருப்பேரைக்கலம்பகம்
5. மணவாளமாமுனி ஊசற்றிருநாமம்,
6. கண்ணபிரான்பேரில் கிளிக்கண்ணி
7. ஐந்தாவது ஜியார்ஜ்சக்ரவர்த்தி அவர்களின் மகுடதாரண வைபவ வெண்பா
8. ஞான சித்தர் வேள்வி விளக்கம்
9. தனிப்பா மஞ்சரி

அச்சிடப் பட்டவை

10. நீதிவெண்பா

மற்றவை கூடிய சீக்கிரம் அச்சிடப்படும்.

மதிப்புரை.

சிதம்பரம் மீனாக்ஷி தமிழ்க்கல்லூரியில் நான் படித்து வரும் சமயம் 1928-ஆம் ஆண்டில், மகா மகோபாத்தியாய பிரம்மஸ்ரீ டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் எங்கள் தலைமையாசிரியர் ஒருநாள் தென் திருப்பேரை, கவி ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்களை வகுப்பறையில் வைத்து அறிமுகப்படுத்தினார்கள்.

அவ்வளவுதான்; காளமேகம் மின்னாமல் கவிமாரி பெய்யத் தொடங்கியது. கடல்மடை திறந்தாற்போலக் கவி வெள்ளம் பாயத் தலைப்பட்டது. சிலேடைப்பொருத்தம், செம்பாகத்தெளிவு, வழக்கச் சொல்லாட்சி இவற்றில் ஐயங்காரவர்கள் காளமேகத்தை வெகு எளிதில் வென்றுவிட்டார்கள். சிலேடை வெண்பாக்களுள் மிகச்சிறந்தது கலசைச்சிலேடை என்பார்கள். ஐயங்காரவர்களுடைய அரங்கச்சிலேடை, மற்றுமுள்ள ராசாவுக்கும் கூசாவுக்கும், கருடனுக்கும் திருடனுக்கும், வேம்புக்கும் ஸ்டாம்புக்கும் முதலிய சிலேடைகள் எங்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தன.

சென்ற நூற்றாண்டின் யமகம் திரிபுகள் யாரும் தெரியக்கூடியனவாக இல்லை. எளிதில் அணுகவொட்டாத மலையவைக்கின்றன. உள்துளைந்து துருவுகையிலும் மலைதோண்டி எலி பிடிப்பதாகவே முடிகின்றன. தற்காலத்தில் இம்மலக்குச் சொல்லடுக்குகளைக் கலைரஸிகர்கள் காய்வதிலும் வியப்பில்லை. ஆனால், ஐயங்காரவர்கள் சொல்லலங்காரமோ பண்பும் பயனுமுடையன. வனப்பும் வன்மையும் வாய்ந்தன. இவர்கள் வாக்கு நலம் யாரையும் தன் வசப்படுத்துகிறது. இவர்களைக்கேட்குங் காலை எங்களை நாங்கள் மறந்து நின்றோம்.

பிரம்மஸ்ரீ ஐயரவர்கள் எங்களுக்கெலாம் ஆசிவழங்க இவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். இவர்களுக்குக் கவி எங்கிருந்துதான் உதித்ததோ? எப்படியோடியது பாருங்கள்!

"வாசித்தலை மருவு மாலருளார்ந்தித்தில்லை
வாசித்தலை மருவு மாணவர்கள்—நேசித்தே
அக்கரையா ஆசான் அருளால் கலைக்கடலின்
அக்கரையைக் காண்பார் அறிந்து".

மாலெங்கே வாசித்தலை மருவினார்? அவர்தான் "பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்ட" லாயிற்றே! அதனாலோ? என்றெலாம் எண்ணலானோம். "திருமாலின் ஹயக்கிரீவ மூர்த்த உபாசனையே கல்விக்காய தென்ற சமயக்கருத்தினை" இவர்கள் விளக்கிக் காட்டினார்கள். ஐயரவர்களும் இவர்களுடைய கவித்திறம் கற்பனை வளம் இவற்றின் சிறப்பியல்புகளை விவரித்துப்பேசி வியந்தார்கள்.

இடையே ஏழெட்டாண்டுகள் கழிந்தன. சென்ற மாதம் தென்திருப்பேரைக்கு நண்பர் T. K. சிதம்பரநாத முதலியாரவர்களுடன் சென்றிருக்கையில், மீண்டுமிவர்களுடன் கலந்துறவாடும் பேறுகிடைத்தது. இவர்கள் இவ்வூரில் வாழையடி வாழையாய் வந்த பரம்பரைக் கவிராயர் மரபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பிதாமகர் திருவிதாங்கூர் சுவாதித்திருநாள் மன்னர்பெருந்தகையிடம் வீரசங்கிலிமுதலிய விருதுகள் பெற்றவர். தந்தையாரும் கவிவலார். செல்வர்களால் சிறப்பிக்கப்பட்டவர். இவர்களையும் கருவிலே திருவுடைய வரகவி எனல் தகும். பண்டித பாமரத் தமிழரானோர் அனைவருக்கும் கம்பன் பாக்களியமுதைப் பகிர்ந்தளித்தூட்டும் கட்டுரை வல்ல திருவாளர் பி. ஸ்ரீ. ஆச்சாரியாரவர்கள் சிறந்த என் நண்பர், நமது புலவரின் தமையனார் புதல்வர். இம்மரபு ஆல்போல் தழைப்பதாக.

கவி ஸ்ரீ ஐயங்காரவர்கள் வானமாமலைமடம் ஆஸ்தான வித்வான். 25-ம் பட்டம் ஸ்ரீ ஸ்வாமிகளால் அபிநவ பிள்ளைப்பெருமாள் என்று சிறப்பிக்கப்பட்டவர். காலஞ்சென்ற ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிலும், வெள்ளி விழாவிலும் வீரசங்கிலி முதலிய பரிசுகள் பெற்றவர். சென்னை கவர்னர் கோஷன் பிரபுவும் இவர்களைச் சிறப்பித்திருக்கிறார். இத்தகைய வித்தகக்கவியின் சித்திரப்

பாடல்களைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுதுபவன் நானு என்ற அச்சம் எழுகிறதாயினும் அவர்கள் விருப்பை நிறைவேற்ற வேண்டியதென் கடமையெனும் உணர்வு பற்றி யிதை எழுதத் துணிந்தேன்.

பல்வேறு காலங்களில் பலர் முன் முடைந்து தொகுக்கப்பட்ட இவர்கள் கவிமலர்கள் இன்னும் வாடாமணமே வீசுகின்றன. என்றும் வீசுமென்பது திண்ணம். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னமே இவர்கள் பாடல்களை ரஸித்தனுபவித்த திருமணம் செல்வக்கேசவராயமுதலியாரவர்கள் "முப்பாலில் முடிவான பாலனைத்தும் இவர்பாலுண்டு, ஏனைப்பால்களை அப்பால் விடுதலான வெறுப்பும் போந்தது. ஏனைரஸமெலாம் பாதரஸமே; இவர் கவிரஸமே ஷட்ரஸம். ஆகலால் இதனை யின்னும் கோடலான விருப்பும் உளதாயிற்று" என்றெழுதினார்கள். இவர்கள் பாடல்களைச்செவி மடுக்குமெல்லார் அனுபவமும் இதுவேயாக.

ஸ்ரீவைகுண்டம் வழக்கறிஞர் S. T. போன்னம்பலநாதமுலியாரவர்கள் கவிச்சுவையை மாந்தித்திளைத்துத் தாம் பெற்ற இன்பத்தைத் தமிழுலகும் பெற வைத்தார்கள். தனிப்பா மஞ்சரியை அச்சிட்டுத் தமிழணங்கின் கொந்தளகத்தில் கவிப்பூங் கொத்தாகச் சூட்டினார்கள். இவர்கள் நீடுவாழ்க. இது கால கதியில் கறுகாது நறுமணம் வீசித்தளிர்வுறு மென்பது என் நம்பிக்கை ஈடேறுவதாக.

மதுரை திரவியம் தாயுமானவர் இந்து காலேஜ், திருநெல்வேலி. 1—4—36	**P. K. அருணாசலக்கவுண்டர்,** தமிழாசிரியன்.



AN APPRECIATION.

K. G. Sesha Aiyar, *Taikad, Trivandrum.*
Judge, High Court (Retired,)

I have had great pleasure and privilege of being acquainted with Brahmasri Ananta Krishna Aiyangar of Tentiruperai for many years. He is a Tamil scholar and poet of high merit and distinction. His poems are varied in character, as regards subject matter, but are uniformly sweet and flowing, and they exhibit in a remarkable degree the excellent adaptability and flexibility of Tamil for the expression of high poetic ideas. His manipulation of delightful **double entendres** is wonderfully facile. He is also a good Sanskrit scholar. He is the **Asthana Pandit of Sri Vanamamalai, Mut**, a position to which by his scholarliness and poetic excellence he does very great credit.

(Sd.) K. G. Sesha Aiyar,

January 19th, 1930.

(TRUE COPY.)

மதிப்புரை

பிரம்பூர்,
செல்வக்கேசவராயமுதலியார் M. A., மதராஸ்,
12—6—1911.

பாளையங்கோட்டையில், சைவசமயாபிவிர்த்திஸபையின் இருபத்தைந்தாவது வருஷோஸ்தவத்தின் பொருட்டு, நான் சென்றிருந்த காலத்தில், தென்திருப்பேரை, கவி. ஸ்ரீ அனந்தகிருஷ்ண அய்யங்காரும், அவர் சகோதரரும் அங்குற்றிருந்தனர். நானும் பிறரும் தங்கியிருந்த மாளிகையில் அவரைச்சந்திக்கும் சமயம் நேர்ந்தது. நேர்ந்தவிடத்து, அனந்த கிருஷ்ணர் தாமியற்றிய, ஸ்ரீபத்மநாப ஸ்வாமி சந்திரகலாமாலை, திருவரங்கச்சிலேடைமாலை, தனிப்பா மஞ்சரி, திருப்பேரைக் கலம்பகம், முதலிய நூல்களில் நின்றும் பல பாக்களை எடுத்தோதி விளக்கினர். புதிய வசன நூல்களை வாசிப்பதும், எழுதுவதும் எனக்குக் காலக்ஷேபம், புதிய செய்யுள்நூல்களை நான் பார்ப்பதுமில்லை; கவனித்துக் கேட்பதுமில்லை. ஆயினும், இந்தக்கவியின் சிலேடைகளைக் கேட்ட அளவில், காளமேகம் அகாலத்தில் வந்து கவிமாரி சொரிகின்றதோ? என்கிற ஐயம்புகுதலாயிற்று. இவருடைய மடக்குகளைக் கேட்ட அளவில், சைவ எல்லப்ப நாவலரையும், பிள்ளைப்பெருமாளையங்காரையும், மீண்டும் பார்க்கவேண்டுமென்கிற எண்ணம் எழலாயிற்று. முப்பாலில் முடிவான பாலனைத்தும் இவர்பால்கண்டு ஏனைப்பால்களை அப்பால் விடுதலான வெறுப்பும் போந்தது. ஏனை ரஸமெல்லாம் பாதரஸமே; இவர் கவிரஸமே ஷட்ரஸமாதலால் இதனை யின்னுங் கேடலான விருப்பும் உளதாயிற்று. அப்போது அங்குற்ற ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீ வேங்கடசாமி முதலியாரவர்கள் கவிராஜரை நிமிஷகவி யென்றார். அந்தோ! காட்டைக்கவி, கலைக்கவி என்ற வழக்காறின்றே! என வருந்தினேன். இக்காலக் கவிகளில் அநேகரிருந்தும் இறந்தகாலக்கவிகளே. இந்த அனந்தகிருஷ்ணர் நிகழ்கால எதிர்காலக்கவியென்பது திண்ணமாகத் தோன்றுகிறது. மதுரகவி ஆழ்வார்குலத்தரான இவரையும் இக்கால மதுரகவியென்றே போற்றவேண்டும். இவ்வென்கூற்றைக் கேட்பவர் இதனை அதிசயோக்தியாகக் கருதக்கூடும். இவருடைய கவிகளைக் காண்பவரும் கேட்பவரும் என் கூற்றை ஸ்வபாவோக்தியென்றே, கொள்வர். இந்தக்கவிராஜர் இன்னும் கால நீடித்தல் செய்யாது தமது நூல்களை யெல்லாம் ஒருசேரமுத்ரித்துக்காட்டி, என் கூற்றை மெய்ப்பிப்பாரென்று விரும்புகிறேன். இவர் கருவிலே திருவுடைய கவியென்பதே என்கோள்.

(Sd.) திருமணம் செல்வக்கேசவராயன்,

வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி
4—7—1935.

தென்திருப்பேரை ஸ்ரீ அனந்தகிருஷ்ணய்யங்கார் அவர்கள் பரம்பரையாய்த் தமிழ் ஸம்ஸ்கிருதம் ஆகிய இரு பாஷைகளிலும் வல்லவரா யிருந்துவந்த குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். தற்போது ஸ்ரீ வானமாமலைமடத்து ஆஸ்தான வித்வானாயும் இருக்கிறார்கள். அவர்கள்பாடியுள்ள சிலேடை, யமகம், திரிபு, ஏய்ப்புமுதலான ஹாஸ்ய ரஸமுள்ள பாடல்களுக்குக் கணக்கில்லை. மணிக்கணக்கில் அல்ல, நாட்கணக்கிலேயே பாடல்களைக்கொட்டிக்கொண்டிருப்பார்கள். கேட்டுக்கொண்டிருந்தால், சித்திர கவிகளில் ஈடுபட்டவர்களுக்குப் போது போகிறதே தெரியாது. பசிதாகம்கூட ஏற்படாது. காளமேகத்தைக்கொண்டாடிக்கொண்டிருக்கிற புலவர்கள்கூட ஐயங்கார் அவர்கள் பாடலைக்கேட்டுவிட்டால் காளமேகம் எல்லாம் சூரியனைக் கண்ட பனிதான் என்று விடுவார்கள். மேலேசொன்ன வின்னியாச விசித்திர வேலைகளுக்கெல்லாம் தமிழ்ப்பாஷை எப்படி இடங்கொடுக்கிறது என்பது; ஐயங்கார் அவர்கள் பாடலிலிருந்து நன்றாய்த் தெரியவரும். இது பற்றி அவர்களுடைய பாடல்களை அனுபவிக்க எல்லாரும் முன் வரவேணும்.

(Sd.) T. K. சிதம்பரநாதமுதலியார்,

Entomend Board, Commissioner (Retired.)

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

மதுரை 31—8—1935

உபய மஹா வித்வான்

ஸ்ரீ. உ. வே. திருநாராயணையங்கார்

ஸ்வாமி அவர்களின்

அபிநந்தனப்பத்திரிகை.

திருமகளென்றும் மருமகளொடுவாழ்
சீரியன்தென் றிருப் பேரைமாநகரோன்
தேசமர் சீநிவாச வேதியனார்
நன்மைப்புதல்வன் தொன்முறைவழாது
வடமொழி தென்மொழி இடவல்லானைத்
தலைவராம்மென உலவுநற்சாமமாம்
வேதமுந்தமிழ்தரு வேதமுமுணர்ந்தோன்
உயர்ந்தோர் குழாத்தி னுட்கொளப்பெற்றோன்
அநந்தசயனத் தநந்தன்பதமிசை
புனைந்தசந் திரகலா மாலையும்; பொன்னிசூழ்
திருவரங்கச் சிலேடைமாலையும்;
திருப்பேரைப்பதி விருப்புறுமாற்கு
நலம்படியின்சொற் கலம்பகமுதலா
பலபிரபந்தம் பலமுறப்பாடி,
வானமாமலைமுனி வரனருளபிநவ
பிள்ளைப்பெருமாளெனும் பெயர்பெற்றோன்.
தனிப்பாமஞ்சரி யினிப்பா வியம்பினன்.
காளமேக கவியெனப்புவிசொலும்

அனந்தகிருஷ்ணைவாரியன்.

கனிந்தசெஞ்சொற்கவிஞரேறே!

பிழை திருத்தம்.

பக்கம் எண்.	பாடல் எண்.	பிழை.	திருத்தம்.	வரி.
		ஸபை	ஸபை	மதிப்புரை (பிரம்பூர்)
		என	என்	ஷை ஷை
		Entomend	Endowment	ஷை(வண்ணார்பேட்டை)
		முதலா	முதலாப்	ஷை(மதுரை)
2	6	பெச்சாளி	பெருச்சாளி	உரை
8	26	யவணின்	யவனின்	
9	27	ஊசிகுக்ம்	ஊசிக்கும்	
14	44	இல்லத்தை	இல்லத்தை.	உரை
15	47	கட்டிடல்	கட்டிடல்.	ஷை
16	51	பணனுமிர்த	பன்னுமிரத	
16		கோவிந்தமய்யங்கார்	கோவிந்தய்யங்கார்	
1748	53	பலகை; பலகை.	பலகை; பல கை.	
17		திருவேங்கட.த்தைய் யங்கார்	திருவேங்கடத்தையங்கார்	
19	59	லாயர் நிரை	லானுயர்	
20	62	யோர் தேசாக்	யோர்—தேசாச்	
21	65	மாப்பிள்ளையை	மாப்பிளையை	
22	67	சிறுவர்க்கு	சிறுவர்க்கு	உரை
23	67	கேண்மை யென்று	கேண்மையமென்று	
23	68	வாயு-மகன்-ஆகு-மனு மான்	வாயு, மகன், ஆகு, மனு, மான் வாயுமகனுகுமனு யான்	ஷை
25				உரை
25	73	கண்ணுடி	(கண்ணுடி)	
27	74	புகழ் கருஷ்ண	புகழ்க் கிருஷ்ண	
29	79	சாராவணே	சாரவணே	உரை
29	83		சந்து-தாது, சாயகம்-பாணம் வசந்தன்—மன்மதன்	
29	84	வென்ருன்	வென்ருள்	
30	85	வென்றவன	வென்றவன்	
32	91	நாட்டைக்குறிஞ்சி	நாட்டைகுறிஞ் சி	உரை
32	91		சீ—ஸ்ரீராகம்	
33		சாமிநாதைய்யர்	சாமிநாதையர்	உரை
33	94	இலகும்ப ரமன்	இலகும் பரமன்	
37	103	நின்சிவிகை	மின்சிவிகை	
38	106	கற்ப தரு	கற்பதரு	
40	113		அலங்கல்—மாலை	
40	114		உவா—அமாவாசை. சிக்கம்— குடுமி.	உரை

பக்கம் எண்.	பாடல் எண்	பிழை.	திருத்தம்.	வரி.
40	115		வாரணைம் தும்பி—யானை, அம்பகம்—கண்.	உரை
41	117	அன்பா!—நீ	அன்பா! நீ	
44		லெக்ஷிசன் ஆபீஸரும்	லெக்ஷிகன் பதிப்பாசிரியரும்	
44		வையாபுப்பிள்ளை	வையாபுரிப்பிள்ளை	
48	136	மாறனை	மாரனை	
48	139	உமாதவன்—மாதவன் நடராஜன்-கோவிந்த ராஜன்	உமாதவன்-நடராஜன்; மாதவன்-கோவிந்தராஜன்	உரை
51	149	மூன்	மூன்று	உரை
54	160	அன்னாள்	அந்நாள்	
56	162	நீறை	நிறை	
60	176	புலவீரினைத்தும்	புலவீரிதைநும்	
61	181	விருத்தியக்ஷமான	விருத்திக்ஷயமான	உரை
62	183	மா—சிலை காண்டீம்	மாசிலை-பெரியவில் காண்டீவம்	உரை
62				
63	183		பல அலவன்-பலசண்டு. அலவலவன்—பலராமன்	உரை
63	186		வேந்தன்—சந்திரன்	உரை
		வர்ணித்தல்	வர்ணித்தல்	
65	197		மித்திரன் வெய்யவன் } சூரியன்.	உரை
			சசி—சந்திரன்	

குறிப்பு:- 189-ம் செய்யுள் "அந்நப்புர" என்றது முதல் 193-ம் செய்யுள் "தனுவோடி" என்ற செய்யுள் முடிய 179-ம் செய்யுளின் தொடர்ச்சியாக வாசித்துக் கொள்க.

அபிநவ காளமேகம்

ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருஞான முத்திரை துணை.

தனிப்பா மஞ்சரி.

காப்பு.

காளமேகப்பேர்க் கவிஞனெனப் பாமொழிய
நாளமே கப்பேர் நளினவுன்றன்—தாளைத்
அதித்தேன்; குருகைச் சுடரே!பா மாரு !
உதித்தருள்வா யென்றனுளத்து.

திருமகளுக்கும், திருமணப்பந்தருக்கும் சிலேடை.

1 மாலையுற லாலதிக மாதருள வால்நயமா
வேலைபெற லாற்பூவில் மேவுதலால்—கோல
மணத்தார் புனையும் வகுளா பரணா !
மணப்பந்த ராம்பூ மகள்.

குறிப்புரை:- மாலை-பூமாலை; திருமாலை. மாதர்-அழகு-ஸ்திரீகள்.
வேலை-கடல்; வேலைப்பாடு.

திருமகளுக்கும், பார்வதிக்கும்.

2 ஆரு மலைமகளென் றஞ்சக் கரன்கொளலாற்
பேருலகி லஞ்சம்பு பெற்றவேள்—நேரிலிசைந்
தன்னையெனப் போற்றுகையா லாரியனே ! பார்வதியும்
பொன்னவளு மொன்றெனவே போற்று.

ஆரும் அலைமகள்—இலக்குமி; ஆரும் மலைமகள்-பார்வதி.
அம்சக்கரன்-அழகிய சக்கராயுதத்தையுடையவன்.
அஞ்சு அக்கரன்-பஞ்சாட்சரன்.
அஞ்சு அம்பு பெற்றவேள்-பஞ்சபாண முள்ளமன்மதன்.
அம்சம்பு பெற்றவேள்-அழகிய சிவபெருமான்பெற்ற சுப்பிரமணியர்.

திருமாலுக்கும், தாமரைப்பூவுக்கும்

3 தண்டுறலால் மாவாசஞ் சாருதலால் மித்திரனைக்
கண்டுமகிழ்ந் தங்குளத்திற் காணலால்—ஒண்டொடிசேர்
செய்யவளுக் குப்பதியாச் சேர்ந்திடலால், தாமரையைச்
செய்யதிரு மாலெனவே செப்பு.

தண்டு-கதாயுதம்; தாமரைத்தண்டு. மாவாசம்-அழகிய வஸ்திரம்; மிக்க வாசனை. மித்திரன்—அன்பனாகிய தாசன்; சூரியன். அங்கு உளம்; அம்குளம். பதி—நாயகன்; இருப்பிடம்.

திருமாலுக்கும், தேங்காய்க்கும்

4 பாலுறலா லங்கோடு பற்றுதலா லிங்கேயெக்
காலமுமே யுள்ளீரம் காணலால்—ஞாலமதில்
கல்லுக் குடைகொளலாற் கண்ணனையே தேங்காயாய்
எல்லொக்கு மாறு ! இயம்பு.

பால் உறல்—பாற்கடலில் சேர்தல்; தேங்காய்ப்பால். அம்கோடு—அழகிய சங்கு; அங்கு ஓடு. ஈரம்—அன்பு; குளிர்ச்சி. கல்லுக்குடைகொளலால்—கோவர்த்தன மலையைக் குடையாய் எடுத்தலால்; கல்லுக்கு உடைகொளலால். எல்—சூரியன்.

இராமனுக்கும், கிருஷ்ணனுக்கும்,

5. அம்மானை வென்றவரா யாதவகு லோத்தமராய்ச்
செம்மா ருதிக்குதவி செய்தவராய்—சும்மாமுன்
கானத்து வந்தவராய் காசினியில் தோன்றியமால்
ஞானத்தை யீவான் நனி.

அம்மானை—அழகிய மான்வடிவமான மாரீசனை; மாதுலனான கஞ்சனை. ஆதவகுலம்—யாதவகுலம். மாருதி—வாயுகுமாரனான அனுமான்; வீமன். கானத்து வந்தவர்—காட்டில் வந்தவர்; வேணு கானத்தில் சந்தோஷித்தவர்.

வீணைக்கும், விநாயகருக்கும்

6. சாற்றுங் கடமுறலால் தந்திமுகங்கொளலால்
தோற்றிடவே யாகுமிசை தோய்ந்திடலால்—ஏற்ற
மணம்பதியுஞ் செய்ய மகிழ்மாலை மார்பா!
கணபதியே வீணைநிகர் காண்.

கடம்—குடம்; மதஜலம். தந்திமுகம்—தந்திக்கம்பி பொருந்துமுகம்; ஆனைமுகம். ஆகுமிசை—ஆகும் இசை; (வாகனமாகிய) பெச்சாளியின் மேல்.

கந்தனுக்கும், பரமசிவனுக்கும்

7. செந்திலையே மேவுதலால் சீர்ப்பணியைப் பூணுகையால்
சந்ததமுங் கங்கா சலமுறலால்—எந்த
இடத்துமலை வில்லானென் றேத்துகையாற் பெண்ணை
இடத்திலுளான் கந்தற் கிணை.

செந்திலை—செந்தில் நகரை;' செம் தில்லை—அழகிய தில்லையை. பணி—ஆபரணம்; பாம்பு. கங்காசலம்—(கங்க அசலம்) கழுகுமலை; கங்கைநீர். மலைவில்லான்—மலைவு இல்லாதவன்; மேருமலையை வில்லாக உடையவன். இடத்தில்—இடது பாகத்தில்.

கந்தனுக்கும், பச்சைமிளகாய்க்கும்

8. பார்க்கவிதை யுட்கொளலாற் பண்பா முன்னாலுகையால்
தீர்க்க வரைபடவே செய்திடலால்—ஆர்க்குமெழிற்
சந்தையிலு மேவுகையாற் சாருதலா லாங்காரம்
கந்தனிகர் பச்சைமிள காய்.

பார்க்கவிதை—பாரில் [பக்தர்கள் பாடும்] கவிதை; பார்க்க விதை. முன்னாலுகை—பன்னிருகை; (செடி) முன் தொங்குகை. தீர்க்கவரை படவே—பெரியகிரௌஞ்சகிரிபடவே; தீர்க்க அரைபடவே. சந்தையிலும்—சந்து (சந்தனம்) ஐயிலும் [வேலும்]; வியாபார ஸ்தலத்திலும். ஆங்கு ஆரம்; ஆம்காரம்.

நரசிங்கமூர்த்திக்கும், பரமசிவனுக்கும்

9. அங்கனகனைக்கொலலா லஞ்சுமுக மார்ந்திடலால்
துங்கமணித் தாணுவிலே தோய்ந்திடலால்—கொங்குகமழ்
தாளரவிந் தத்தினிதந் தாழ்ந்தோர்க் கருள்மாறா!
ஆளரியைப் போன்றா னரன்.

அங்கனகனை—அழகிய இரணியனை; அங்கு அனகனை [அனங்கனை]. அஞ்சுமுகம்—பயப்படும் படியான முகம்; ஐம்முகம். தாணு—தூண்; மலை—(கைலைமலை).

செக்குக்கும், பரமசிவனுக்கும்,

10. ஆடுதலா லப்போ தரவம் படிந்திடலால்
மாடுளதாற் செட்டி மருங்குறலால்—நாடதனில்
மிக்க கனமுறலால் மேன்மைவகு ளாபரணா!
செக்குநிக ரானான் சிவன்.

அப்போது அரவம் படிந்திடலால்—ஆடும் போது சத்தம் உண்டாதலால்; அ புஷ்பத்தையும சர்ப்பத்தையும் அணிதலால். மாடு—செக்கான்காளை; ரிஷபம். (வாகனம்). கனம்—பாரம்; மேன்மை.

சேக்குக்கும், சங்குக்கும்

11. சத்த மிடலால் தருமலேயின் றேவரலால்
சுத்தவெண்மை யாயதிலே தோன்றிடலால்—நித்தமுமே
வாணியனை நேருதலால் வாய்ந்த பெருஞ் செக்கினுக்கு
நீணிலத்திற் சங்கே நிகர்.

தருமலே நின்றேவரலால்—மலேயிலிருந்து வருதலால். அலேயின் று—கடலிலிருந்து வருதலால்; சுத்த எள் மையாய் (மை, மசிதல்); சுத்த வெண்மையாய். வாணியனை நேருதல்—எண்ணெய் விற்கும் செட்டியைப் பொருந்துதல்; நிறத்தால் சரஸ்வதியாகிய அன்னையை ஒத்தல்.

ஐவுளிக்கடைக்கும், பரமசிவனுக்கும்

12. பலவம் பரத்தினையே பார்ப்பவர்க்கு நல்கி
பலவிலையன் றூரிடவே பற்றி—நலமருவுஞ்
செய்யமதி மானவிடஞ் சேர்ந்திடலாற் சங்கரனைத்
துய்யசவு ளிக்கடையாச் சொல்.

பல அம்பரத்தினை—பல வஸ்திரங்களை; பிரயோஜனமான அழகிய முத்தியை. பார்ப்பவர்க்கு—காண்போருக்கு; பூமியில் ஸம்ஸாரிகளுக்கு. பலவிலே—வேறுபாடான கிரையம்; பழங்களும் பச்சிலேகளும். மதிமான் அவிடம்சேர்ந்திடலால்—புத்திமான் அந்த இடத்தில்இருத்தலால்; சந்திரன் மான் விஷம் [நீலகண்டம்] சேர்ந்திருத்தலால்.

வயலுக்கும், குயிலுக்கும்.

13 அங்கங்க றுப்பா லறுமா விலேகொளலால்
எங்கெங்குஞ் சத்த மிடுகையால்—கங்குல் பகல்
காக்கையிறு லேவளரக் காணலால் மாறு! நல்
வாக்குக் குயிலாம் வயல்

அங்கு அங்கு அறுப்பு; அங்கம் கறுப்பு. மா விலே மா இலே. சத்தம்—அறுப்புக்கூலி; சப்தம்; காக்கையினுல்—காத்தலினுல்; காக மெனும் பறவையால்.

கருடனுக்கும், திருடனுக்கும்.

14 எப்பணியுந் தூக்குதலா லென்றுஞ் சிறைபுறலால்
இப்புவியோர் முன்பாவி யென்பதனால்—செப்புபுகழ்ச்
சக்கிரிபாற் கைகூப்பித் தாழ்ந்திடலால் நாவீறு!
தக்ககரு டன்திருடன் தான்.

பணி—பாம்பு; ஆபரணம். சிறை—இறகு; சிறைச்சாலை. முன்பாவி வீ—பட்சி; முன் பாவி. சக்கிரி—விஷ்ணு; அரசன்.

ஆனைக்கும், பூனைக்கும்.

15 பன்னகங்க ளிற்பிறந்து பாரிலமர் வாயிருந்து
முன்னங் கெலித்தலையுண் டூட்டுதலால்—இன்னிரசத்
தேனனைய பாவாந் திருவாய் மொழிபகர்ந்தோய்!
ஆனைநிகர் பூனை யறி.

பன்னகங்களில்—பல்நகங்களில் (பல மலைகளில்,) பன்னு அகங்களில். அமர்வாய்—யுத்தத்தில்; அமரிக்கையாய். கெலித்தலை—ஜெயித்தலை; முன் அங்கு எலித்தலை.

வேம்புக்கும், ஸ்டாம்புக்கும்.

16 மிக்க விலைபெறலால் வெண்டரையு மேவுதலால்
தக்க வரசுத் தலைபுறலாற்—பக்கமதாய்ப்
பத்தர் பணியும் பராங்குசனே! அச்சுமுகர்ப்
பத்திரமே வேப்பமரம் பார்.

மிக்க இலை; மிக்கவிலை. வெண் தரை; ஸ்டாம்புவெண்டரை. அரசுத்தலை—அரசமரத்தினிடத்து; ராஜாவின்தலை. (வேம்பையும் அரசையும் ஒன்றாக வளர்த்தல்மரபு)

துட்டனுக்கும், சிட்டனுக்கும்

17 இவனல்ல யோக்கியனென் றெல்லாருஞ் சொல்வார்
அவனியிற்பே ராசை யகலும்—நவமாப்
பரத்தையகம் நாடுதலால் பாமாறு! நல்ல
நாற்று நிகர் பொல்லா நரன்.

இவன் அல்ல; இவன் நல்ல. அகலும்—அதிகரிக்கும்; நீங்கும். பரத்தை அகம்—வேசை வீடு; மேலானதை மனம்.

பாலுக்கும், மாலுக்கும்

18 வாய்ந்தமடு மேவிடலான் மாதுரிய மேவுறலால்
ஏய்ந்திடுநல் லாடை யிசைந்திடலால்—தோய்ந்தவெழில்
பாத்திரமுட் கொண்டிரதம் பற்றிடலா லெல்லாரும்
ஏத்திடுமால் பாலுக் கிணை.

மடு—பசுவின்மடி; காளியன்குளம். மாதுரியம்—இனிப்பு; முத்திநிலை. நல் ஆடை—பால் ஆடை; நல்ல வஸ்திரம் (பீதாம்பரம்). பாத்திரம் உட்கொண்டு; பா—(ஆழ்வாராதிகள்) பாடல், ஸ்திரம் உட்கொண்டு. இரதம்—இரசம்; தேர் (அர்ச்சுனன் தேர்).

ஓலைக்கும், சேலைக்கும்

19 தாலமதில் மேவுந் தறித்தலைமுன் கொண்டிடலால்
மேலு மிறப்பினிலும் வேய்ந்திடலால்—சீலமுடன்
நாடாருங் கட்டுதலால் நன்னெசவுச் சேலைகளை
வீடாரு மோலையென விள்.

தாலம்—பனை; பூமி. தறித்தலை — தறிக்கையை; தறியினிடத்தில். இறப்பு—கூரை; மரிப்பு. வேய்ந்திடல்—மூடுதல்; அலங்கரித்தல். நாடாரும்—பனையேறும் ஓர் சாதியாரும்; நாட்டில் யாவரும். கட்டுதல்—வெட்டிக் கட்டுதல்; அரையிற் கட்டுதல்.

சந்திரனுக்கும், இந்திரனுக்கும்

20 சாப மருவிச் சசியென்று மேவுதலால்
மாபணியுந் தன்பான் மருவலால்—மாபதஞ்சேர்
துங்கநல வானை யணுகியே தோன்றிடலால்
திங்களைநேர் தேவேந் திரன்.

சாபம்—குருசாபம்; வில். சசி—சந்திரன்; இந்திராணி பணி—இராகு வெனும் பாம்பு; ஆபரணம். பதம்—இடம்; கால். [நல]வானை—ஆகாயத்தை; [நல]ஆனை—ஐராவதம்.

ராசாவுக்கும், கூசாவுக்கும்

21 அண்டு முலோகத்தா லமைச்சும் பயமதையுட்
கொண்டு காம்பற்றுங் கொள்கையால்—மண்டும்
தமிழருமே சேர்ந்திடலால் தக்கபுகழ் மாரு!
தமிழராசைப் போன்றது கூசா.

உலோகம்—உலகம்; பஞ்சலோகம். அமைச்சு—மந்திரி; செய்து (அமைத்து). பயம்—பீதி; பால்; ஜலம். காம்—கப்பம்; கை. தமிழர்—தமிழ்ப் பாஷை பேசுபவர்; ஓர் வகைப்பாத்திரம்.

ஸ்ரீவைகுண்டம் தாசில்தார்
ஸ்ரீமான் திருவேங்கடத்தையங்கார் அவர்கள்
முன்புக்குப் பாடியது.

கண்டகத்திற்கும் முண்டகத்திற்கும்

22 வாயு முளரியென வண்கான் மருவுதலால்
ஏயு மடுப்புக் கெடுத்திடலால்—தீயவரைத்
தெண்டனையே செய்யுந் திருவேங் கடத்தானே!
கண்டகமே முண்டகமாங் காண்.

வாயுமுன் அரியென, முளரியென—அரி—சத்துரு; முளரி—தாமரை. கான்மருவுதல்—காலில்தைத்தல்; வாசனை சேருதல். அடுப்புக்கு; மடுபுக்கு. கண்டகம்—முள். முண்டகம்—தாமரை.

தட்டானுக்கும் முட்டாளுக்கும்

23 படிப்பை யெடுத்திடலால் பாரினகை செய்ய
மடத்தனமு மண்டிவரலால்—வடித்தவெழுத்
தெட்டானைப் போற்று மெழிற்குருகை நாவீரு!
தட்டானுக் கொப்பாமுட் டாள்.

படிப்பை எடுத்திடல்—தங்கம்நிறுக்கும் படிகளுள்ள பையை எடுத்தல்; கல்வியை அடையாதிருத்தல். நகைசெய்ய—ஆபரணம் செய்ய; சிரிக்கும்படி. மடத்தனமும்—மடாதிபதிகளின் பணமும்; மூடத்தன்மையும். எழுத்து எட்டான்—அஷ்டாக்ஷரனை (மஹாவிஷ்ணு).

திருமகளுக்கும், திருமாலுக்கும், தேருக்கும்

24 அச்சங்கு மேவுதலா லாழிபெற லான்மிகவே
இச்சையலங் கார மிசைந்திடலால்—மெச்சும்
அருமலர்ப் பூஞ்சோலை அழைகுருகூர் வேந்தே!
திருமகள்மா லொப்பாகுந் தேர்.

அ சங்கு—வளையல்; சங்காயுதம். அச்சு அங்கு. ஆழி பெறல்—சமுத் திரம் பெறுதல்; சக்கராயுதம் தரித்தல்; (தேர்) உருளை உடையதாதல். அலங்கு ஆரம்; அலங்காரம்—அழகு; அலங்கரிப்பு.

திருமாலுக்கும், சிவனுக்கும், பழஞ்சோற்றுக்கும்

25 முன்பானை நாடுதலால் மூதலகோர் கையெடுத்தே
அன்பாக வுள்ளே யமைத்திடலால்—தன்பால்நீர்
மேலுறலால் வண்குருகை வேந்தா! பழஞ்சோறு
மாலரனு மொன்றா மதி.

முன்பு ஆனை—கஜேந்திரம்; இடபத்தை; முன் பானை—பழம்பானை. கையெடுத்தல்—தொழுதல்; கையால் எடுத்தல். தன்பால் நீர்—பாற் கடல்; தன்னிடத்தில் கங்கை; பழஞ்சோற்றில் ஜலம்.

அஞ்சு சிலேடை.

கொங்கைக்கும், மலைக்கும், சிவனுக்கும், திருமாலுக்கும், நம்மாழ்வார் தங்கப்பல்லக்குக்கும்.

26 பன்னகமேல் மேவுதலால் பற்றிடலால் மாதங்கம்
இங்கிலத்தக் கோடென்று மெய்தலால்—அன்னக்
கொடிசேர் பராங்குசனே! கொங்கைவரை சூலி
நெடியவனின் பல்லக்கு நேர்.

பன்னகம்—பல் நகம்; பலமரம்; பாம்பு; ஆதிசேஷன்; பல்லக்கின் மேல் விதானம். மாதங்கம்—மாது அங்கம்; யானை; பார்வதியாகிய மாது; திருமகளாகிய மாது; தங்கப்பூச்சு. கோடு—யானைக்கொம்பு; மரக்கொம்பு; மலைச்சிகரம்; சங்கு; சித்திரரேகை.

ஊசிக்கும், கோபுரத்துக்கும்.

27 அம்பரத்தை நாடுதலா லங்கூர்மை சேருதலால்
அம்புவியி னூல்விவர மார்ந்திடலால்—வம்புமகிழ்
மாபுரத்தி லேதிகழு மாறா! நின் னாலயத்துக்
கோபுரத்தை யூசியெனக் கூறு.

அம்பரம்—வஸ்திரம்; ஆகாயம். அம் கூர்மை; அங்கு ஊர் மை (மை மேகம்). நூல்விவரம்—நூல் செல்லும் துவாரம் (ஊசிக்காது); சிற்பசாஸ்திரமுறைப்படி.

கொடிமரத்துக்கும், கோபுரத்துக்கும்.

28 ஆடம் பரமேவி யங்கனமு மேற்கொளலால்
ஆடகமே சேர வமைந்திடலால்—நாடும்
அடியவரைக் காக்கு மணிமகிழ் மாறா! நுவுன்
கொடிமரத்தைக் கோபுரமாக் கொள்.

ஆடம்பரம்—கொடிப்பட்டம் (ஆடு அம்பரம்); பரிப்பு. அங்கனம்—அன்னப்புள் (அங்க அனம்); நீருண்ட மேகம் (அம்கனம்). ஆடகம்—தங்கம்; மேடராசி (ஆடு அகம்).

பாம்புக்கும், கோபுரத்துக்கும்.

29 சேர்ந்தவர்கள் கட்டிடலாற் செய்ய படியதிலே
ஆர்ந்திடலால் வான்மேவி யண்டிடலால்—சேர்ந்தவர்கள்
நல்லபணி யென்கையால் நம்புதவைக் கோபுரத்தைச்
செல்லுவிடப் பாம்பெனவே செப்பு

கட்டுதல்—தடைகட்டுதல்; கட்டிடமாக்கல். படி—பூமி; (கோபுரப்) படிக் கட்டு. வால்மேவி; வான்மேவி. நல்லபணி—நல்லபாம்பு; நல்லவேலை.

பாம்புக்கும், சந்திரனுக்கும்.

30 சங்கானங் கங்கொளலால் தானிலவாய் மேவுதலால்
துங்க விடமருவித் தோன்றிடலாற்—பொங்குபயம்
பெற்றிடலால் நங்கைதவப் பேறே! அமுதகரம்
பற்றுமதிக் கொப்பாம் பணி

அங்கம்—தேகம்; அழகியதலை. நிலவாய்—பூமியில்; நிலவாகி. துங்க விடம்; துங்க இடம். (உயர்ந்தஇடம்) பயம்—பீதி; பாற்கடல். பெற்றிடல்—அடைதல்; பெறுதல்.

சிவனுக்கும், கடலுக்கும்.

31 வங்கமலை மேவுதலான் மான்மருவிச் சீர்பெறலால்
அங்குமை சேர் வண்ண மமைந்திடலால்—கங்கை
கலந்திடலால் முக்கணற்குக் கார்க்கடலெந் நாளுங்
கலந்திகழ்மார் பா! விணையாங் காண்

வங்கமலை—வெள்ளிமலை; தோணி அலை; மான் மருவி—கையில் மான் பொருந்தி; விஷ்ணு சேர்ந்து. அங்கு உமைசேர்; அங்கு மை சேர் (மை மேகம்; கறுப்புநிறம்). கம் கை கலந்திடல்; கங்கைகலந்திடல்.

சவளிக்கடைக்கும், கடலுக்கும்.

32 சேலைமிக வேகொளலாற் சீர்முதலை மேவுதலாற்
சாலவுமே சீகமுஞ் சார்ந்திடலாற்—கோலக்
கசங்கொண் டிடலாற் சவளிக் கடைநீர்
இசையுங் கடலுக் கிணை

சேலை—வஸ்திரம்; மீனை. முதலை—மூலதனத்தை; ஓர் ஜெந்து. சீகம் —லட்சுமீகரம்; நீர்த்திவலை. கோலக்கசம்—கெஜக்கோல்; அழகான ஆழம்.

யானைக்கும், கடலுக்கும்.

33 காணு மணி பெற்றுக் கயமென்றும் வாய்ந்திடலால்
நீணிலத்துத் தானையென நேர்ந்திடலால்—சேணிற்
குடமருவு மாடக் குருகூர்வாழ் செல்வா!
கடகரியை யொப்பாங் கடல்

மணி—யானைமணி; இரத்தினம். கயம்—ஆனை; ஆழம். நிலத்துத் தானை—படை; பூமிக்கு வஸ்திரம் (கடல்).

கொங்கைக்கும், கடலுக்கும்.

34 மாதரங்கஞ் சேருதலால் வண்கலங்கள் மேற்கொளலால்
ஏதமிலாதங்கோல மெய்தலால்—ஓதுங்
கனமுறலா லங்குசத்தைக் கார்க்கடலுக் கொப்பா
மனமதிலே மாறு! மதி

மாதர் அங்கம்; மா தரங்கம் (அலை). கலம்—ஆபரணம்; தோணி. அம் கோலம் (அலங்காரம்); அங்கு ஓலம் (சத்தம்). கனம்—பாரம்; மேகம்.

கொங்கைக்கும், சீலைக்குடைக்கும்.

35 கையாற் பிடித்திடலாற் காம்புறலால் தையலிடம்
மெய்யாய்த் திகழ்ந்து துணி மேவிடலாற்—செய்யாட்குப்
பங்கயத்தை யொத்த பதிக்குருகை நாவீறு!
கொங்கைநிக ராகுங் குடை

தையலிடம்—மாதரிடம்; தையலுற்ற இடம். மெய்-சரீரம்; நிஜம்.

கொங்கைக்கும், சாம்பாருக்கும்.

36 காய மருவிக் கனமாப் பருப்பதிலே
வாயு மலிவாசம் மன்னுதலால்—மாயவன்மேல்
தேம்பாகு போன்ற திருவாய் மொழிபகர்ந்தோய்!
சாம்பாரை யொப்பாந் தனம்

காயம்—சரீரம்; பெருங்காயம். பருப்பதில்—பருத்தலில்; அதிலே பருப்பு. மலி வாசம்—நிறைந்த வஸ்திரம்; மல்லியின் வாசனை.

மத்தளத்துக்கும், மன்மதனுக்கும்.

37 அடிக்குங்கால் நல்லிரத மார்ந்திடலாற் செய்ய
கொடிக்கிணையா வாரணியாக் கொண்டே—மடித்தலைமுன்
மானிடராற் கொள்ளுகையால் மத்தளத்தை யெஞ்ஞான்றும்
மான்மகனை யொப்பா வழுத்து

அடிக்கும்கால்—அடிக்கும்போது; வீசும் காற்று. இரதம்-இரஸம்; தேர். கொடிக்கிணையாவார் அணியாக்கொண்டு-தோல்வார் நெருக்கமாகக்கொண்டு; மாதரைப் படையாகக்கொண்டு மடித்தலை—மடிமிசை; சாதலை. மானிடரால்—மனிதரால்; மானை இடத்திலே கொண்ட சிவனால்

மெத்தைக்கும், மன்மதனுக்கும்.

38 அம்பஞ்சு மேவுதலா லங்கம் படலாலிவ்
வம்புவியி னற்றை யலார்ந்திடலால்—நம்புந்
திருஞான முத்திரைக்கைச் செல்வனே! மெத்தை
திருமால் மகனுந் தெரி.

அம் பஞ்சு; அம்பு அஞ்சு. நல்தையல்-நல்லதையல்; இரதிதேவி.

P. W. D. ஓவர்ஸியர் ஸ்ரீமான் சுப்பராமையரவர்கள் கேள்விக்குப் பதில் (இதுவும் அடுத்த பாடலும்)

பஞ்சுக்கும், காற்றுக்கும்

39 மெத்தையிலு மேவி மிகவாடை யாய்மருவி
சுத்த ககனமதிற் றோன்றிடலால்—நத்திப்
பணவரவாற் கொள்ளுகையாற் பஞ்சுவடகாற்றுக்
கிணையன்றோ? மாறு ! இசை.

மெத்தையில்—பஞ்சணையில்; மேடை வீட்டில். ஆடையாய்; வாடையாய். ககனம்—காடு; ஆகாசம். பணவரவால்-பொருள் வரவினால்; படத்தையுடைய பாம்பினால்.

ரூபாய்க்கும், பேனாவுக்கும்,

40 நல்விருத்திக் கேபு நலனு வுருக்கிடலால்
பல்விதமாச் சீர்மை படிந்திடலால்—கல்வியுளோர்
அத்தமென்றுங் கைக்கொளலால் ஆய்ந்தெழுது கோற்கருவி
சுத்தவெள்ளி நாணயமாச் சொல்.

விருத்திக்கு—அதிகப்படுத்த; தொழிலுக்கு. நலனு உருக்கிடல்—தீயில் நன்றாய் உருக்குதல்; ஸ்டீல்நிப் உருக்கினால்செய்தல் (நலன் நா உருக்கு இடல்). சீர்மை—சிறப்பு; சிறந்த மை. அத்தம்—பொருள்; கை.

ஆனைக்கும், வேதத்துக்கும்,

41 மிக்க பொருட்பெறலால் மேலுந் துதிக்கையுடன்
தக்கநல வாரணமாச் சார்ந்திடலால்—பக்கமொடு
பார்ப்பார் பயன்கொளலால் பாரிலிபம் வேதமெனச்
சீர்ப்பா வுரைத்தோனே ! செப்பு.

மிக்கபொருள்—அதிகவிலை; மிகுந்த வேதார்த்தங்கள்.
துதிக்கை—தும்பிக்கை; ஸ்தோத்திரம் செய்தல்.
நல வாரணம்—நல்ல யானை; நல்லவேதம் (ஆரணம்.)
பார்ப்பார்—பேணிப்பார்ப்பவர்; அந்தணர்.

குதிரைக்கும், வீட்டுக்கும்

42 ஓடிடலாற் கட்டிடமே யுற்றிடலால் மாவென்றும்
நாடிடலால் மேல்மெத்தை நண்ணுதலால்—ஏடவிழும்
தாரார் சடகோபா! தக்கசெல்வர் வீட்டுக்கு
ஏரார் குதிரை இணை.

ஓடிடல்—ஓடுதல்; ஓடுவேய்தல். மா—குதிரை; இலக்குமி. மேல் மெத்தை—சேணம்; மாடி.

இந்நூலாசிரியர் ஒரு சமயம் ஆறுமுகனேரி உப்பளத்திற்கேக நண்பரான ஆப்காரி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ரெங்கசாமி நாயுடவர்கள் புதுக்காளமேகம் என்று உபசரிக்க, அருகிருந்த ஸப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் காளமேகம்போலக் கவிசொல்வார் இக்காலத்திலுண்டோவென்று மறுக்க, நாயுடு அவர்கள் இது பெருங்காளமேகமென, ஆனால் இக்கடிகாரத்துக்கும் தோட்டாவுக்கும் சிலேடை சொல்லட்டும் என்று சொன்னவுடனே கூறியது.

கைக்கடிகாரத்துக்கும், தோட்டாவுக்கும்,

43 அங்கியுள் ளமைந்திடலால் அருமணி கொண்டிடலால்
இங்குபல முள்ளவரை யெய்திடலால்—எங்கெவரும்
மெய்க்கரங்க சாமிமன்னு! மேன்மைபெறு கிர்ஷ்ணய்யர்
கைக்கடிகா ரந்தோட்டா காண்.

அங்கியுள் ளமைந்திடல்-சட்டைப்பையிலிருத்தல்; உள்ளே தீ அமைந்திடல். ஆருமணி கொண்டிடல்-யாரும் மணிபார்த்துக்கொள்ளல்; நிறைந்த படைவகுப்பு வைத்திருத்தல் (ஆரும் ஆணி). பல முள் அ (வ்) வரை; பலமுள்ளவரை.

திருச்சி நேட்டிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஆறுமுக நாயனார் கேள்விக்கு விடை:—

காவிரியாற்றுக்கும் யோகிகளுக்கும்

44 அங்கங் கருந்தவரை யண்டியுமே வந்திடலால்
எங்கணுமுள் ளாறுகடந் தெய்திடலால்—இங்கெவரும்
கூடகத்தை நீக்குதலாற் கொள்ளிடத்து மேவுதலால்
ஓடு பொன்னி யோகியருக் கொப்பு

அங்கங் கருந்தவரை அண்டியும்—அங்கங்கே குடிக்கவும் மலையை நெருங்கியும்; அவ்வவ்விடங்களிலுள்ள அருமையான தபசிகளைச் சேர்ந்தும், உள் ஆறுகள் தந்து; உள் ஆறு கடந்து (ஆறு—காமக்குரோதாதி உட்பகை ஆறும்). கூடகத்தை—சேர்ந்த பாபத்தை (கூடு அகத்தை); வஞ்சனையை, சேரும் இல்லத்தை கொள்ளிடத்து—கொள்ளிடம் என்னும் கிளை நதியில்; மனம் கொண்ட இடத்தில்.

கொடிய அதிகாரிக்கும் தீக்கும்.

45 அங்கியென்று மேவிடலால் அண்டினரைக் காய்ந்திடலால்
எங்கணுமே யீரமிலை யென்றிடலால்—சங்கையின்றித்
தேசங் கெடுத்திடலால் தீயவதி காரிகளைத்
தேசிகனே! தீயெனவே செப்பு

அங்கி—சட்டை; தீ. காய்ந்திடல்—கோபித்தல்; எரித்தல். ஈரம்—அன்பு; குளிர்ச்சி. தேசங்கெடுத்திடல்—தேசத்தைக்கெடுத்தல்; ஒளி வீசுதல் (தேசு அங்கு எடுத்திடல்),

இட்டலிக்கும் வேசைக்கும்

46 மாடமதிற் சேர்ந்திடலால் மாசசிபோற் காணுதலால்
சூடகங்கொண்டுவிலை தோய்ந்திடலால்—நாடதனிற்
சிட்டரெலா மெச்சவருந் தேவே! நவமான
இட்டலி நல் வேசைக்கிணை

மாடம்-உளுந்து; மேடை. சசி-சந்திரன்; இந்திராணி. சூடகம் கொண்டு-உஷ்ணம் கொண்டு; சூடகம் என்னும் கைவளை அணிந்து. நவமான-புதிதான.

புகை வண்டிக்கும் வேசைக்கும்

47 சேரவண்டிக் கட்டிடலால் சீராய்ப் பொருள்கொடுத்தோர்
ஆருமே மேலேறி யார்ந்திடலால்—தாரணியில்
ஓட்டமது மேவுதலால் ஊர் வாழ்கணிகையரைக்
கூட்டுபுகை வண்டியெனக் கூறு

சேர் அவண் (அவிடம்) டிக்கட்டு இடல்; சேர அண்டிக் கட்டிடல் ஓட்டமது-அது ஓடுதல்; அதரமது.

பன்றிக்கும் வேசைக்கும்

48 கட்ட மருந்திடலால் கந்தம் நுகர்ந்திடலால்
திட்டமதாய்க் கோலமென்றும் சேர்ந்திடலால்—சிட்டரிடம்
தென்றிசைக்கோ னண்டாது தெற்குதித்த மித்திரனே!
பன்றி நிகர் வேசையாம் பார்

கட்ட மருந்திடல்—மலம் தின்னல்; ஆடவரை வசப்படுத்த மருந்து செய்தல். கந்தம் நுகர்ந்திடல்—கிழங்கைத்தின்னுதல்; வாசனை நுகர்தல். கோலம்—பன்றியின் பேர்; அலங்காரம். தெற்கு உதித்த மித்திரன்—தென்திசையில் தோன்றின சூரியன். (வகுள பூஷண பாஸ்கரன்)—நம்மாழ்வார்).

பாம்புக்கும் வேசைக்கும்

49 தந்தவிடம் சேருதலால் தக்கவர் முன் பாடுகையால்
சொந்தமதாப் போகம் தொகுத்திடலால்—அந்தவனை
பற்றுதலால் நல்ல பணங்கொளலால் வேசையரைப்
புற்றரவு கொப்பாப் புகல்.

தந்தவிடம்—பல் விஷம்; (பணம்) கொடுத்த இடம். தக்கவர்முன்பு ஆடுகை; தக்கவர்முன் பாடுகை.

பனைமரத்துக்கும் பார்வதிக்கும்

50 காதோலை வெட்டுகையால் காண் வயிரஞ் சேருதலால்
மீதாக் குசக்கலச மேவுதலால்—ஆதார
அங்கிக் கணக்க னருங்காத்தைச் சேர்த்திடலால்
சங்கரியே தாலமரந்தான்.

காது ஓலை—மோதும் ஓலை; காதணி. வயிரம்—மரவைரம்; ஓர் இரத்தினம். குசக்கலசம்—குயவன் செய்கலசம்; குசமாகிய கலசம். அங்கிக்கணக்கன்—சட்டை தரித்த கர்ணான்; தீயான நெற்றிக் கண்ணுள்ள சிவன் (அங்கிக்கண் நக்கன்). காத்தை—தீர்வையை; கையை.

இந்நூலாசிரியர் அத்தான் ஸ்ரீமான் கோவிந்தமய்யங்கார்
கேள்விக்கு விடை:- இதுமுதல் 10 பாடல்கள்

சூரியனுக்கும் கலவிக்கும்

51 மன்னுமா கத்துறலால் வைகறையிற் சேர்ந்திடலால்
பன்னு மிர்தமே பற்றிடலால்—பின்னுமேல்
ஆசைபடிந்திடலால் அத்தை சுதனே! கலவி
தேசிரவிக் கொப்பாந்தெரி.

மன்னு மாகத்து (மாகம் ஆகாசம்); மன்னும் ஆகத்து (ஆகம்—தேகம்). வைகறை—விடியற்காலம்; பள்ளியறை (வைகு அறை). இரதம்—தேர்; இன்பரஸம். மேல் ஆசை—மேல் திசை; அதிக ஆசை.

இது போலுள்ளனவாதலால் 10 பாடல்களும் அச்சில் நிறுத்தப்பட்டன.

போலீஸ் டிப்டி சூப்பெரின்டென்டு ஸ்ரீமான்

R. நாராயணய்யங்கார் கேள்விக்கு விடை.

கலகம்செய் மாதுக்கும், கழுதைக்கும்

52 கட்டுப்படலாலுட் காழ்படலால் எஞ்ஞான்றும்
மட்டில் பெரியமைக்கண் வாய்ந்திடலால்—சிட்டருக்கு
நல்லுதவி செய்துவரும் நாராயண நண்பா !
சல்லியஞ்செய் மாது கழுதை.

காழ்படல்—(நெஞ்சில்) வைரந்தோன்றல்; காழ் காழ் என்று கத்துதல்
பெரிய மைக்கண்; பெரியம்மையிடம் (மூதேவி யிடம்).

ஷை யார் ஒரு சமயம் விருந்து செய்வித்தபோது பாடியது.

53 இட்டமுடன் நீயெங்கட் கிட்டவிருந் துண்ணவயன்
இட்டவிருந் தைபோதா தென்றெண்ணி—மட்டில்
நலனேநல் லார்க்குச்செய் நாரணனும் நண்ப !
பலகை யொடு வீற்றிருந்தோம் பார்.

பலகை; பலகை.

இது முதல் பாடல்கள் நான்கும், தாசில்தார் ஸ்ரீமான் திருவேங்கடத்தையங்காரவர்கள் கேள்விக்கு விடை:—

பல்லாரி என்றெடுத்துக் கடப்பை என்று முடித்தது.

54 பல்லாரியர்கள் பணியும் பராங்குசனைக்
கல்லாவென் னெஞ்சே கணமேனும்—பொல்லா
அவக்குணத்தை விட்டேநீ யன்பாய்த்தொழுதால்
பவக்கடலி னின்று கடப் பை.

கடுவாய் என்றெடுத்துப் புலி என்று முடித்தது.

55 கடுவா யரவதனிற் கண்டுயில்வோ ஞன
இடமா தவற்கோர் இருக்காம்—தடமாவில்
ஆடகமாக்கொண்ட வரனுர்க்கு நல்லசிரோ
பூடணமே யாமம் புலி.

கடு—விஷம். மாதவனுக்கு ஓர் கண்ணுறக்கம், அம்புலி. பொன் மலையான மகாமேருவை வில்லாகக்கொண்ட சிவபிரானுக்கு அம்புலி தலையாபரணமாக அமைந்துள்ளது.

சங்கென்றெடுத்துச் சக்கரம் என்று முடித்தது.

56 சங்கணிகைக் கோவியரான் தத்தளிக்க இந்திரனுல்
பொங்குமழை முன்னம் பொழிபுங்கால்—துங்கமலே
வண்ணக் குடையாக வாய்ந்திடக்காம் பாயதுநங்
கண்ணன் சரோசக் கரம்.

கண்ணனது தாமரைப் பூப்போன்ற கையானது, கோவர்த்தன கிரியைக் குடையாக்க; ஓர் காம்பாயிற்று. சங்கு—வளை,

குரங்கணியிலம்மன் கோடையென்று பாடியது.

57 தேசிலங்கை சுட்டதுவுந், தேராசர் கொள்ளுவதும்,
வாசமதா மாந்தர் வசிப்பதுவுர்,—ஈசன்
மருங்கி லிருப்பவளும், வான்தருவின் சீரும்,
குரங்கணியி லம்மன் கொடை.

இலங்கை சுட்டது......குரங்கு
அரசர் கொள்வது......அணி
மாந்தர் வசிப்பது......இல்
ஈசன் மருங்கிலிருப்பவள்......அம்மன்
வான்தருவின் சீர்......கொடை

திருச்சியில் 1900-ம்வருஷம் S. P. G. காலேஜ் தலைமைத்
(தமிழ்ப்பண்டிதரா யிருந்த),
ஆ. கா. பிச்சை இபுறுஹீம் புலவர் கேள்விக்கு விடை:—
இது முதல் நான்கு பாடல்கள்.

ஸமஸ்தி:— துருக்கனுக்கு ராமன்துணை.

58 பத்தியினால் மண்ணவர்க்குப், பாசத்தால் விண்ணவர்க்குச்
சுத்தகுலந் தோன்றிடலால் துன்னலரைக்—கத்தக்
கருக்கு மிலக்குவற்குக், காண்பாதற் குச்சத்
துருக்கனுக்கு, ராமன் துணை.

துன்னலரைக் கத்தக்கருக்கும் இலக்குவன்—பகைவரைக்கதறும்படிப் பொசுக்கின இலக்குமணன்.

ஸமஸ்தி:— பக்கிரியைக் கண்டாற் பலன்.

59 நிர்த்தயவாய்ச் சோனைமழை நேருங்கா லாயர் நிரை
ஆர்த்தசையு றுதுயரத் தூக்கியகோ—வர்த்தனமாம்
அக்கிரியாற் காத்த அழக னமருமிட
பக்கிரியைக் கண்டாற் பலன்.

இடபக்கிரி—திருமாலிருஞ் சோலைமலை.

ஏழுகம் வரப்பாடுமின் எனப் பாடியது.

60 தீயிற் பொறியின்பேர் தேகத்திற் கேற்றபேர்
வாயுங் கழுகின்பேர் வானின்பேர்—நேயமுடன்
அங்கிலமாம் நன்மொழியில் ஆரையுமே வாவென்னல்
கங்கங்கங் கங்கங்கங் கம்.

தீயின்பொறி......கங்கு.	வானின்பேர்......கம்
தேகப்பேர்......அங்கம்.	இங்கிலீஷில் யாரையும்
கழுகின்பேர்......கங்கம்.	வா என்றழைத்தல் (Come கம்.)

ஏழு கம்வரப்பாடியது. (வேறுவிதம்)

61 பாரகமுன் ஈண்ட பாமனகம் சொல்கின்றேன்
ஊரகம் சேர்க் காரகம்கா ஓங்குவள—நீரகம் தண்
பாடகமிவ் வூர்திருமால் பாரியொடு, பாவலவ !
கூடகமென் றேநீ குறி.

பாரகம், பாமனகம், ஊரகம், காரகம், நீரகம், பாடகம், கூடகம், (ஆக ஏழுகம்)

ஐந்து து வரப்பாடியது.

62 போசேசா ! சூதாப் பொருந்தும் து து து து து
காசே கருதிடுமிக் காசினியோர் தேசாச்
சிகைக்கணிவார் பாவங்கள் தீர்க்குநல் லோனும்
பகைக்கிடமாம் பூவி லுறும் பார்.

காசினியோர் சிகைக்கணிவார்......போது (பூ)
பாவங்கள் தீர்க்கும்... ... ... சேது
நல்லோன் ... ... சாது
பகைக்கிடம் ... ... சூது
பூவில் உறும் ... ... (பூந்) தாது.

திருவானைக்காவில் 1900—ம்வருஷம் பிரசித்திபெற்றிருந்த ஞானசித்தரிடம் கற்பதித்த பவித்திரம் பரிசு பெற்றபோது பாடியது

63 திங்கள் முகஞான சித்தன்பால் வேள்விவளம்
செங்கையிலே சேரொனது சீர்விரலே !—இங்கு
கவித்திறமை செய்தெழுதிக் காட்டியதா லன்றோ
பவித்திரம் நீ பெற்றாய் பயன்.

ஷை ஞானசித்தருடன் அகிலாண்டேசுவரி ஸந்நிதிக்குச் சென்றபோது பாடிய

கலித்துறை.

64 அஞ்சொற் கவிசொல நங்காள மேகற் கருள் புரிந்தாய்
தஞ்சமெனு மடியேற்கு மவ்வாறு தயவுசெய்வாய்
கஞ்சந்தனி னின்று நற்றேன் பெருகு கழனியிலே
அஞ்சந்துயிலுந் திருவானைக்கா நகரம்பிகையே !

திருச்சியில் (1900–ம்வருஷத்தில்) ஓரிடத்தில் ஒரு விபரீதச்செய்கை நடந்ததைப்பற்றி சில நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது

பாடிய விருத்தம்.

65 காரனைய மேனியுறு மாமனாரைக்
காதலுடன் வில்லிபுத்தூர்க் கோதை சேர்ந்தாள்
ஆரமணி காந்திமதி, நெல்லை வாழும்
அப்பனையும் வள்ளி குமாரனையுஞ் சேர்ந்தாள்
பேரிரதி மாப்பிள்ளையைச் சேர்ந்தாள் வாணி
பிதாமகனைச் சேர்ந்தணைந்தா ளிவற்றாலிந்நாள்
நாரியர்கள் கலிகாலத்தியல்பாச் செய்யும்
நடத்தைகளைக் குற்றமெனல் ஞாயமாமோ ?

மாமன்னாரை நெல்லையப்பனை; குமாரனை (முருகனை); மாப்பிள்ளை—இலக்ஷ்மியின் மகனான மன்மதனை. பிதாமகன்—பிரமன். வாணி—ஸரஸ்வதி.

சென்னையிலிருந்து, ஓர் சுந்தரி கஜவாதமுள்ள (பெருங்கால்) தம் கணவருடன் ஸ்ரீரங்கத்துக்கு வந்ததைக்கண்டு பாடிய கலித்துறை.

66 ஓதப்புடுக்குறும் பித்தனையேநம் முமையவளும்
தீதில் படியளக்கும் பெருங்காலனைச் செய்யவளும்
சீதள நீர்க்கர வேதனை வாணியும் சேர்ந்திருந்தால்
மேதினி வாழ்மடவாரை யெவ்வாறு விதிவிடுமே ?

ஓது அப்பு உடுக்கு உறும்பித்தனை—கங்கைநீர், உடுக்கு உள்ள பரமசிவனை. படி அளக்கும் பெருங்காலன்—பூமியை அளந்த திருவிக்கிரமனான நெடியோனை. சீதளநீர்க்கரவேதனை—குளிர்ந்த (குண்டிகை) நீரைக்கையிலுடைய பிரமனை.

திரிசிரபுரம் S. P. G. காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஆ. கா பிச்சை யிபுராகிம் புலவர் தமது கடனிவிர்த்திக்காக ஆசிரியரைத் தமது இஷ்ட தெய்வத்தின்பேரில் ஓர் கவி பாடும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்கிப் பாடியது.

ஆசிரிய விருத்தம்.

67 சீர்மேவு வெண்டிங்கள் சாளரத் தோடுலவு
சிகாமணி மாட நீடு
திரிசிர புரத்துனது சரிதமதை யென்றுமே
சிறுவர்க் கருமருள் செய்தகையோன்
ஏர்மேவு நின்னடித் தாமரையை ஏத்துமடி
யேங்கட்கு மிக்க நண்பன்
ஈடிலா மகமதியன் நாடியே வந்தவர்க்
கேற்றகலை நல்குதாரன்
பேர்மேவு பிச்சை யிபுராகிமெனு நாவலன்
பேறுபெறு மானி கடனாற்
பேதுறு வண்ணங் கடைக்கணித் தன்னான்
பெருஞ்செல்வ னாக வருள்வாய்

பார்மீதி லேபயக் கடனின்று வெளிவந்து
பைம்பொழிற் றிருவரங்கப்
பதிமேவு பதிமார்பு பதிவாகவே யிலகு
பங்கயச் செல்வி யனையே!

உனது சரிதம்–தேவ ஸ்திரீகள் சிறை மீட்டத் தான்சிறையிருந்தவளாகிய உனது ஏற்றஞ்சொல்லும் இராமாயணம். கலை—வித்தை; வஸ்திரம். (சவளிக்கடையுடையவர்) பயக்கடல் நின்று–பாற்கடல் நின்று; பீதிக்கிடமான கடன் நின்று வெளிவந்தவள். திருவரங்கப்பதி–ஸ்ரீரெங்கம் என்னும் திருப்பதியில். பதிமார்பு–பர்த்தாவின் மார்பில் செல்வி—பணக்காரி–அனை லோகமாதா–குற்றம் பிரஜைகளிடத்திற் பாராட்டாது பொறுக்கத்தக்கவள் ஒரு மாதத்திற் கடன் நிவிர்த்தியாய் ஆசிரியரை ஆவிநேர்கேண்மை யென்றும் அன்பனென்றும் சாற்றுக்கவிகளில் சொல்லியிருக்கிறார்.

வேம்பத்தூர் சிலேடைப்புலி ஸ்ரீமான் பிச்சுவையரவர்கள் ஆசிரியரைப் பார்க்கத் தென்திருப்பேரையில் வந்திருக்கும்போது (வாயுமகனாகுமனுமான்) என்று ஈற்றடியைச் சொல்லப் பூர்த்திசெய்த வெண்பா.

68 செந்தழற்கு மித்திரனுந் தேடுபொருட் குற்றவனுந்
தந்திமுகனேறுவதுந் சார்நீதி—தந்தவனுந்
தாயுமைகோன் பற்றியதுந் தாசரதி தூதுவனும்
வாயுமகனாகுமனு மான்

வாயு–மகன். ஆகு–மனுமான். வாயுமகன்–ஆகும் அனுமான்.

ஷை யார் (மால்வாகனம் நன்மயில்) எனப்பூர்த்திசெய்த வெண்பா.

69 கோவர்த்தனத்தைக் குடையாய்ப் பிடித்ததுவும்
ஆவலுடன் நாமகள்கோ னண்டுவதும்—மாவலிமை
வேல்வலவ னேறுவதும் வெம்பணியின் சத்துருவும்
மால்வா கனம்நன் மயில்

மால்வாகு–அனம் (அன்னப்புள்) நன் மயில். பணியின் சத்துரு–மால் வாகனம். (கருடன்) மயில்.

ஷை பிச்சுவையரவர்களின் குமாரர் மஹாதேவையர்
வேண்டுகோளுக்கிணங்கி ஓர் சமயம் பாடியது.

70 பூதேவன் மிக்க பொருட்பானிற் கேமொழியிம்
மாதேவன் கொண்ட கடன் வட்டியுடன்—மாதேவன்
மைந்தா! திருச்செந்தூர் வாழ்செட்டீ! தீர்த்திறுத்தல்
கந்தா நினக்கே கடன்

ஓர் சமயம் ஆசிரியரும், அவர் அத்தானும் கருணைகிழங்கு சேனைக்கிழங்கு வாங்கியதில் ஆசிரியரின் ஒரு சேனையை அத்தான் மறைத்து வைத்தபோது பாடியது.

71 திருவன வென் னச்சை திருமகனே! புன்பாற்
கருணை மிகுத்திருக்கக் கண்டுந்—திருவருள்சேர்
நீதானே தந்திரியா னேர்ந்தெனது சேனையையேன்
சூதா வொழியவைத்தாய் சொல்

மதுரை டெக்னிக்கல் ஸ்கூலில் ஒரு சமயம் ஒரு கூட்டத்தார் ஆசிரியரின் சிலேடைகளைக் கேட்டபின் கூடவந்த அத்தானை யாரெனக் கேட்கும்போது

பாடிய விருத்தம்.

72 நல்லதோர் குடும்பன் யார்க்கும் நாவிதனின்சொற்றட்டான்
புல்லர்களிடத்தில் நாடான் பொருந்திய விடையன் மேலோர்
சொல்லுநற் கவிக்கு நெஞ்சத் துருக்கனித் தாணித்தேவன்
இல்லுறு மெனக்கத்தானு விசைந்தன னறிமின்னீரே

குடும்பன்—நல்ல குடும்பத்தைச்சேர்ந்தவன்; ஓர் தாழ்ந்த ஜாதி. நாவிதன்—நாவில் இதமுடையவன்; அம்பட்டன். பொருந்திய விடையன்—கேள்விக்குத்தக்க விடையளிப்பவன்; ஓர் ஜாதி. நெஞ்சத்து உருக்கன்—துருக்கன். தாணித்தேவன்—பூசுரன்; ஓர் ஜாதி.

பெருங்குளம் ஜலதரங்கம் அப்பாத்துரை அய்யங்கார் விருப்பப்படி அத்தானுக்கு வேடிக்கையாய்ப் பாடிய வெண்பா.

73 ஒருபாட்டில் தேனமைத்தே னுன்றனக்கா வின்று
வருபாட்டை நோக்கத்தை மைந்தா!—குருபாதம்
வந்தித்தேன் உய்ந்தேன் மகிழ்ந்தேன் உனைப்போலச்
சிந்தித்தேன் மாறன் பாத் தேன்.

ஒரு பாட்டில்—ஒரு கவியில்; கண்ணாடி பாட்டிலில். வருபாட்டை—வரு கவியை; வரும்பாலதயை. தேனெனும் சொற்கள் அமைந்திருத்தல்.

கொழுமடை யென்னும் ஊரிலிருந்து வந்து கர்ணம் வேலைபார்த்து வந்த ஒருவன் ஆசிரியருக்கு நீதியின்றி சிவாய்மா ஏற்படுத்த அதற்காக ஸ்ரீவைகுண்டம் தாசில்தார்

ஸ்ரீமான் கிருஷ்ணய்யரவர்களிடம் கூறியது.

74 தென்பேரை யூரிற் சிவாய்மா நீதியின்றி
யென்பாற் கொழுமடைய னீந்தனனம்—துன்போற்
புவிராயர்க் கல்லாற் புகழ்கிருஷ்ண மன்னா!
கவிராயர்க் கேற்றதோ? காண்.

சிவாய்மா—(சிப்பாய்) மா—யானை: குதிரை. தெண்டத்தீர்வைக்கு உரியது.

ஓர் நண்பர் மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஒரு வருஷத்திய பேப்பரைக் காண்பித்து அதிலிருந்த (காத்தாற் கடந்தார்கடல்) என்னும் ஈற்றடியை வைத்துப் பூர்த்தி செய்யவேணுமென்றபோது பாடிய வெண்பாக்கள்.

75 அலைமருவு நீரருந்து மம்பிருந்துங் கானில்
அலையுங் கவிக்குலங்கொண் டந்நாள்—மலைநி
காத்தா லணைகட்டிக் காண்சீதை நாய
காத்தாற் கடந்தார் கடல்.

மலை நிகரம்—மலைக்கூட்டம். சீதை நாயகர் அத்தாற் கடந்தார் கடல்.

இதுவுமது.

76 தப்பிதமாஞ் செய்கைச் சமணர் கலைக்கட்டி
அப்பதனிற் கொல்லவினைத் தாழ்த்துங்கால்—அப்பர்
காத்தாற் றொழுதாலைக் கல்மிதப்ப அஞ்சக்
காத்தாற் கடந்தார் கடல்.

கலை (கல்லை.) அப்பு அதனில்—கடல்நீரில். அஞ்சக்காத்தால்—அஞ்சு அக்காம் (பஞ்சாட்சரம்).

பெருங்குளம் ஸ்ரீமான் சுப்பையர், மாயக்கூத்தன், சங்கான், நாராயணன், மஹாதேவன், இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் அனைவோர் பேரையும் அமைத்துப்பாட அன்னார் கேள்விக் கிணங்கிப்பாடியது

நாரைவிடுதூது.

77 மாதேசுப்,பையரவில் மாயக்கூத் தாடினன்
ஆதாரச் சங்காவ மன்று செய்தான்—போதோடு
நாரா யணற் குளந்தை நாதனெனு மாதேவன்
வாரா னோ? நீயறிந்து வா

மாதே சுப்பையாவு-மிக்க தேசும் விடப்பையுமுடைய காளியனென்னும் பாம்பு. (போரில்) சங்கு அரவம்—சத்தம். நாராய் அணல்-அண்ணல் அண்ணல்-பெருமையுற்ற குளந்தை நாதன் எனும் மாதேவன்-திருக் குளந்தை யென்னுந் திவ்ய தேசமாகிய பெருங்குளத்துக்கு நாதனான மா தேவன்.

கோர்ட்டில் ஒரு சமயம் ஒரு கேஸ் அநீதியாகத் தீர்ப்புச்செய்த பொழுது பாடிய கலித்துறை.

78 கொல்லத்தியையு முனமேழ்வண் ணானையுங் கொன்றகண்ணன்
செல்லக்கரத்திற் சுடராழி நல்வளை சேர்ந்ததுவும்
வில்லடிபட்ட சிவனார் கரத்தில் விலங்குற்றதுந்
தொல்லுலகோர்செய் யநியாயத்தீர்ப்புக்குத் தொந்தமன்றே

கொல் அத்தி—யாரையும் கொலைசெய்ய வல்ல கம்ஸனது பட்டத்து யானை (குவலயா பீடம்). ஏழ்வண் ஆன்—பின்னைப் பிராட்டியைத் திருமணம் செய்வதற்காக மதித்த ஏழ் விடைகளை(க்கொன்றான்). ஆழிவளை—மோதிரம். காப்பு; சக்கரம் சங்கு. அருச்சுனன் கையால் வில்லடிபட்ட சிவன்—பாசுபதாஸ்திரம் பெறுதற்காகத் தவஞ்செய்யும்போது வேடரூபியாக வந்த பரமசிவன். விலங்கு—தளை; (மிருகம்) மான். அநியாயத் தீர்ப்புக்கிவை அன்றே தொந்தம்—ஸம்பந்தம்.

ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீமான் தர்மரங்கராஜா அவர்கள் விருந்தாகப் பெருமாள் ஸந்நிதியில் ஆசிரியரும், தமையனாரும், சாப்பிட்டு வந்தபின்ஷையார் முன்னிலையில் பாடிய

விருத்தம்.

79 புங்கவ! தன்மரங்க பூப!நின் னுதவியாலே
பொங்கலில் நாடிக் கோயிற் போந்தனங் கடியலங்கல்
தங்குதேன் குழற்பூமாது சாரா வணையான் றன்னை
யிங்கித வடைச் சொல்லாலே யேத்தியுட்கொண்டோம் யாமே

பொங்கு அலில்—அல்லில். இரவில்; பொங்கலில். கடி—வாசனை அலங்கல்—மாலை. தங்கு தேன்குழல்—வாசனைக் கூந்தலையுடைய, பூமாது-திருமகள்; பூதேவி. தேன்குழல் என்னும் பலகாரம். அவணையான் —அரவணை— சர்க்கரைப்பொங்கல். இங்கித அடைச்சொல்—அடைமொழி (வடை) பெருமாளையும் உட்கொண்டோம் மேற்கண்ட பொங்கல். முதலானவற்றையும் உட்கொண்டோம்.

ஷி யாரிடம் திருவரங்கச் சிலேடைமாலையை அச்சிட்டுத்தருவதற் காகப்பாடிய வெண்பா.

80 முன்னந் தராவரங்க மூர்த்திக் கொருமாலை
இன்னிரதமென்ன வியம்பினேன்—உன்னி
அருமையுட னத்தை நின்பா லச்சியற்ற வந்தேன்
தருமரங்கன் நீயான தால்

சந்து—சங்கு. அரா—ஆதிசேஷன், இவற்றையுடைய அரங்கமூர்த்திக்கு முன்னம் தரா-கொடுக்காத அரங்கமூர்த்திக்கு. இன்னிரதமென்ன-இரஸமென்ன; தேரென்ன. அச்சியற்ற (புஸ்தகமாக்க. (தேர் அச்சில்லாவிடில் ஓடாது அச்சு தேருக்கு அவசியம்.) தரும் அரங்கன்—கொடுக்கும் அரங்கன்; தர்மரெங்கன்; அவன் தராவரங்கன்; நீதரும் அரங்கன்.

சென்னைக்கவர்னர் கௌன்ஸலில் முக்கிய அங்கத்தினரான ஸ்ரீமான் சிவஸ்வாமி அய்யரவர்கள் திருச்செந்தூருக்கு விஜயமாகும் போது தென்திருப்பேரையிற் சந்தித்துப் பாடிய

வெண்பா.

81 நான்மூன்று நேத்திரத்தா னான்மூன்று நேத்திரத்தா
னான்மூன்று சேர்ந்தவிரு நற்கரத்தா—னான்மூன்றோ
டைந்தமையு மக்கரத்தா னாலென் சிவசாமிச்
சுந்தர! நிற்கென்றுஞ் சுபம்

நான் மூன்று நேத்திரத்தானால்—முருகனால். மூன்று நேத்திரத்தானால்—-பரமசிவனால். மூன்று சேர்ந்த இருநற்கரத்தானால்—ஐங்கரனால். மூன்றோடு ஐந்தமையும் அக்கரத்தானால் அஷ்டாட்சரனான மஹாவிஷ்ணுவால்-என்றும் சுபம்.

ஓர் நண்பர் கேள்விக்கிணங்கி அம்பட்டனைப்பற்றிச்
சிறப்பித்துப்பாடியது

விருத்தம்.

82 பண்டிதனென்றேகலைதேர் பாவலன் பேருடனம்
பட்டனென்றே கடவுள்தொடு மறையவன்றன் பேரும்
எண்டிசையு நாவிதனென் றெல்லார்க்கு நல்லான்
என்று பொருட்படும் பெயரு, மிசைந்து மெய்யரிடத்தும்
அண்டியுங்கள் குடிமகனென் றஞ்சாமற்சொல்வான்
அவனிபர் யாரும் பணிய ஒருகுடையாண்டுலகிற்
றெண்டனைசெய் மன்னரையுஞ் சிரங்குனியச்செய்தால்
சிலைக்குந் தொழிலுடையவன் சீருரைக்கவல்லாரெவரோ?

இராஜவல்லிபுரம் ஸ்ரீமான் முத்துசாமியாபிள்ளையவர்கள்
(வள்ளல்) தென்திருப்பேரைக்கு வந்திருந்தபோது பாடிய

கலித்துறை.

83 சந்தனந் தென்றனிலவே யிவட்குத் தழலென்பதைச்
சந்தனஞ் சொல்லிவா வில்லைகாண் முத்துசாமி கைக்குஞ்
சந்தனங்கண் மிசைமேவாத தாள்மலர்ச்சாயகவ
சந்தனம் பார்த்துநல் மெய்துணையானதித் தையலுக்கே

சில பெரியநகர்களை யமைத்துப் பாடிய விருத்தம்

தாயிரங்கல்.

84 எழிற்கஞ்சம் போல்விழியா ளுன்றன் காதை
யிங்கோதா வரிகிருஷ்ணா வென்றான் பின்னும்
யழிக்கஞ்சா மதன்மலரம் பம்பா யேவப்
யாரம்மா தஞ்சாவூர் மதிக்குச் சோர்ந்தாள்

கொழுத்தவளித் துளவத்தொங் கற்கத்தாவே!
கூடலிலே இவளுடனே கூடல் செய்வாய்
பழுத்துதிரு நெல்வேலி சிந்தும் பங்கப்
பழனஞ்சூழ் அனந்தபுரப் பதியுள்ளானே !

கஞ்சம்—தாமரை: ஓர் ஜில்லா. காதை—சரித்திரம். இங்கு ஓதா—ஓதி. அரி கிர்ஷ்ணு என்றுள். மலர் அம்பம்பாய் ஏவ. பார்—பாரில். அம்மாது அஞ்சா-அஞ்சி. ஊர்மதிக்கு—நகரும் சந்திரனுக்கு. துளவத்தொங்கல் கத்தாவே. கூடு அலிலே (அல்லில்)—இரவில். கூடல்—சேர்தல். பழுத்து உதிரு நெல் வேலி சிந்தும் பழனம்—வயல். சூழ் அனந்தபுரப் பதியுள்ளானே கூடல் செய்வாய்.

திருவனந்தபுரம் பாடசாலையில் ஆசிரியர் வடமொழி கற்குங்காலத்தில் வலியமேலெழுத்து ஸ்ரீமான் இரவியம் பிள்ளை அவர்களைப் பார்க்கப் போனபோது முதலில் ஷை யார் குமாரர் லெட்சுமண பிள்ளையைப் பார்த்தவுடன் (1888-ஹு) பாடிய

கலித்துறை.

85 ஆடக வாடையுடுத்தோன் றுயிலு மனந்தபுரப்
பாடக சாலையிற் கீர்வாண வித்தை பயிலுகின்றேன்
நாடவருதென்றன் மீதினிலே மிகுவட்பு வைப்பாய்
தாடகை வென்றவன றம்பியின் நாமந் தரித்தவனே!

ஷை லெட்சுமணபிள்ளையுடன் அவர் தந்தை ஸ்ரீமான் இரவியம் பிள்ளையைப்பார்த்துப் பாடிய

விருத்தம்.

86 உத்தமமா மிவ்வலிய மேலெழுத்தாம்
உத்தியோகத்தை யெளியோர்கட் கீந்தால்
அத்தமெலாம் வஞ்சகமா யபகரிப்பார்
அனுகூலஞ் செய்யார்க ளென்றே நெஞ்சில்

இத்தரணியோர் புகழுங் கோரளேந்த்ரன்
எண்ணியே யிவ்வேலைக் கருகனாக
வித்தையுளோர்க் கிட்டமுள திரவியோனை
விதித்தனனே நன்மைபெற வேண்டித்தானே

திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜில் 2-வது தமிழ்ப்பண்டிதரா யிருந்த வைக்கீல் சாமிநாதபிள்ளையவர்கள் சைவக்கழகத்தில் பெரியபுராணம் வாசித்து அர்த்தம் சொல்லும் சொற்பொழிவு கண்டு பாடிய

வெண்பா (1894-வருஷம்)

87 ஓங் கல்வாம லுண்மையாய்ப் பாமருஞ்
சாரங்க பாணி தனையுணரச்—சீரங்கத்
தத்துவத்தைச் சொல்வதற்கிச் சாமிநா தன்போல்வார்
இத்தலத்தி யான்கண் டிலன்

சாரங்கம்—மான்; திருமால்வில். சீரங்கத்தத்துவம்—சீரான வேதாங்க உண்மை: ஸ்ரீரங்கத்தின் உண்மைப்பொருளை.

திருவாங்கூர் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி ஸ்ரீமான் K. G. சேஷய்யர் அவர்கள் லெட்டருக்குப் பதிலெழுதும் லெட்டரில் முதலாவது எழுதிய வெண்பா.

88 சீரியரி லேமுதல்வர் சேர்நகரி லேகடையர்
நேருமதி கார நிலைநடுவர்—பாரிவரென்
றோதும் புகழோங்கு முத்தமச்சே டண்ணாவின்
பாதந் தொழுதுவிணைப் பம்

கடையம் என்னும் நகர் ஷியாரூர்.

திருவாங்கூரில் போலீஸ் ஸூப்பிரன்டென்டு யாழ்ப்பாணம் ஸ்ரீமான் பொன்னம்பலம் பிள்ளையவர்களிடம் பாடியது கலித்துறை. (1892-ல்)

89 முன்னம்பல் மன்மதனை வெல்வெள்ளி முதுமலையோன்
பொன்னம் பலமு முடையானென் றூரும் புகழ்ந்திடவே
பொன்னம்பல மன்ன! நின்னகந்தன் னிற்பொருந்தினன்மா
சொன்னம்பலநற் புலவோர்க் களிக்குஞ்சு சீலவனே!

திருவனந்தபுரம் போலீஸ் இன்ஸ்பெக்றர் ஸ்ரீமான் சாமி ஐயரவர்கள் முன்புக்கு சில ராகங்களை யமைத்து அடைமொழியின்றிப் பாடிய கலித்துறை (1894-ல்)

90 ஆரபிமோகனம் நீலாம்பபுரி சங்கராபரணம்
பூரிகல்யாணி பிலஹரிதோடி. பூபாளமசா
வேரி சௌராஷ்டிர மானந்த பைரவி பாசுகே
தாரகுளை யடாணா முகாரி நாட்டை கெண்டையே

இதுவுமது வெண்பா.

91 வாளிகலி யாணி மணிரங்கு பந்து
வராளி,கமாசு புன்னாக—வராளி,தனி
யாசி, காம் போதி யமுனா கலியாணி
சீ சுருட்டி நாட்டைக் குறிஞ்சி

சில ஊர்களை அமைத்து அடைமொழியின்றிப் பாடியது வெண்பா.

92 மதுரைதிரு நெல்வேலி மைசூர் கடப்பை
புதுவைசே லங்கோயம் புத்தூர்—மதுராந்
தகம்மலையா ளங்கொச்சி தஞ்சாவூர் டில்லி
துகிலிமுக வைதிருச்செந் தூர்

ஆசியர் சிதம்பரம்போயிருக்கும்போது மீனாட்சி தமிழ்க்காலேஜில் பிரின்ஸிபாலாயிருந்த மஹாமஹோபாத்தியாயர் டாக்டர்—ஸ்ரீமான்—உ. வே. சாமிநாதைய்யரவர்கள் மற்றும் உபாத்தியாயர்களையும் மாணவர்களையுங் கூட்டிவைத்து ஆசிரியர் சிலேடைகள் முதலான பல பாடல்களைக் கேட்பிக்கச்செய்த பிரகு. இம்மாணவர்களுக்கு அனுக்கிரஹமாக ஓர் கவி சொல்ல வேண்டுமெனப் பாடிய

வெண்பா.

93 வாசித் தலைமருவு மாலருளார்ந் தித்தில்லை
வாசித் தலைமருவு மாணவர்கள்—நேசித்தே
அக்கரையா வாசா னருளாற் கலைக்கடலின்
அக்கரையைக் காண்பா ரறிந்து

வாசித்தலை—குதிரைத்தலை; படித்தலை. (ஹயக்கிரீவ மூர்த்தியாய்திருமால்) (ஹயக்கிரீவர் உபாஸனையே கல்விக்கு முக்கியம்.)

94 மூவாத கீர்த்தியுள முன்குடுமி யந்தணரோர்
மூவா யிரவருறு மூதுதிலைத்—தேவா!
பணிமே லிலகும் பரம! நின் றாளைப்
பணியுமடி யேனையுங்கண் பார்.

பணி மேலிலகும்பரமன்—நடராஜன்: பணிமேல்—ஆதிசேஷன் மேல் இலகும்பரமன்—கோவிந்தராஜன்.

95 நீண்ட வரவ நெடும் பரியங் கஞ்சாய்ந்து
தாண்ட வங்காண் தில்லைச் சபாபதியே!—மீண்டுநமன்
பாசம் விடுங்கால் பதுமையொடு கோவிந்தா!
பாசம் விடாதெனைக்கண் பார்

பதுமை—இலட்சுமி.

96 கஞ்ச மலர்புரையுங் கண்ணனுங் கண்ணனுடன்
வெஞ்சமர்செய் போதுவெருண் டோடினை நீ—அஞ்சுமுக !
அந்தகனை முன்னுதைத்த வாற்றலுனக் கேற்றதான்
சந்தமைந்த தில்லை நடேசா !

அந்தகன்—குருடன்; நமன். பாணாசுர யுத்தத்தில் தாமரைக்கண்ணனை கண்ணனுடன் போர்புரியும்போது ஓடினை.

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் B. A., L. T. ஸ்ரீமான் சதாசிவமய்யரவர்களை ஆசிரியரின் தம்பியும் டிடி ஸ்கூல் சித்திரப்போதகாசிரியரும் உதவித்தமிழ்ப் பண்டிதருமாகிய S. நம்பி அய்யங்காருடன் பார்க்கப்போன போது பாடிய

விருத்தம்.

97 வெள்ளரிக்கா யூருணியில் வெகுநாளாயிருந்தும்
மிடித்தாபந் தீராமல் மிகுத்தபுனற்கால் சேர்ந்
துள்ளமையும் பாளையங்கோட்டைப் பதியிற் பலநாள்
உற்றிருந்துங் காணாமற் பெருங்குளத்திற் சிலநாள்
தள்ளியபின் வைகைநதி சார்மாணா மதுரை
சார்ந்து மப்பாலிந்த வம்பாசமுத்திரத் தென்தம்பி
தெள்ளுதமிழ் நன்குணர் நின் அன்பினையே நம்பிச்
சேர்ந்தனன் சதாசிவனே ! காத்தலுன்றன் கடனே

மிடித்தாபம் தீர்க்க—வறுமைத் தாபந்தணிக்க. வெள்ளரிக்காய் ஊருணி. வளங்கொண்ட காலமைந்தபாளையங்கோட்டை பெருங்குளம் வைகைநதி வளமுள்ளமாணாமதுரை அம்பாசமுத்திரம். அதாவது ஊருணி, கால், குளம், நதி, சமுத்திரம், முறையே நீர் பெருக்குள்ள இடங்கள். மேற்கண்டவை ஒவ்வோரூர்.

ஸ்ரீவானமாமலை மடம் 24—வது பட்டம் சின்னப்பட்டர்பிரான் ஸ்வாமி சந்நிதியில் சால்வைகள் பெற்றவுடன் பாடிய

வெண்பா.

98 இருசால்வை கற்றோர்கட் கீவரோ? வேந்தர்
இருசால்வை யென்பரலா லீங்கு—விரைசாரும்
மட்டவிழ்பூஞ் சோலை வரமங்கை மாநகர்வாழ்
பட்டர்பிரான் மாமுனிபோற் பார்த்து

ஷை மடத்தைப்பற்றிப் பாடியது.

99 பாவலர்கொண் டாடுமடம் பார்ப்பார் புகழுமடம்
சீவரமங் கைக்கிலைமாச் சீர்த்தமடம்—மேவச்
சிரமங் களையுமடஞ் செல்வமட மெங்கள்
வரமங்கை யோகி மடம்

100 கவ்வையணு காதமடங் காவலர்கள் நாடுமடம்
எவ்வருணத் தாரு மிறைஞ்சுமடம்—செவ்வைமலர்க்
காமனுற வஞ்சுமடங் காசினியி லேவான
மாமலைவாழ் யோகி மடம்

கவ்வை—பழிச்சொல். மலர்க்காமன்—மலர் அம்புள்ள மன்மதன்.

ஸ்ரீ வதரியாச்சிரமம்வரை உத்தர யாத்திரை செய்து திரும்ப ஊருக்கு எழுந்தருளும்போது ஸ்ரீ வானமாமலைமடம் 25—வது பட்டம் சின்னக்கலியன் ராமானுஜஸ்வாமி ஸந்நிதியில் விண்ணப்பம் செய்த ஆசிரிய விருத்தம்.

101 சீர்கொண்ட தென்திரு வனந்தபுரமால்தனைச்
சேவித்து மூல நிருபன்
சிரங்குனித் தேத்திடப் 'பேசுமின்" பாசுரச்
சீர்மையை விளக்கி மாறன்

செப்புமாறன்வினை முதற்பதிகள் தொழுதுமே
சீதயாதவ கிரிதனிற்
சேர்ந்து திருநாரணற்கா ளாயுறக்கமில்
தேவர்தொழு வதரிமேவி
ஏர்கொண்ட நாரணன் பாதமா மலர்தன்னை
யிதயமல ரோடிருத்தி
இராமனகர் வடமதுரை நல்விருந்தாவனம்
ஏதமில்செக நாதமும்
எய்தியேதென் கலைக் குரியவடவெல்லையா
யேய்ந்ததிரு வேங்கடத்தில்
எந்தையலர் மேன்மங்கை சிந்தையு மகிழ்ந்திட
இறைஞ்சியே பூதூர்தனிற்
பேர்கொண்ட வெதிராஜ கேசரியை வாழ்த்திப்
பெருங் கோவலூர் வணங்கிப்
பெம்மானரங்கநக ரெம்மானையுந் தொழுது
பிறைதவழு சோலை மலைமேற்
பிறங்குதோளழகனைத் துதிசெய்து புதுவையின்
பெருமையாச் சொன்னவண்ணம்
பெரியதோரக்கார வடிசில் செய்வித்தபின்
பெண்கோதையைப் பணிந்து
கார்கொண்ட முகிலணவு மணிமாட கோபுரக்
கவின்மேவு வரமங்கையிற்
காவலர்கள் நாவலர்கள் கனவான்கள் தனவான்கள்
கைதொழுது வரவேற்கவே
கனகமுறு சிவிகையி லெழுந்தருளி வரமங்கை
காந்தனரு ளார்ந்துபதிசேர்
கலியனெனு முனிவனிரு பதமலர் வணங்குவோங்
கலிநலியு மலியு நலமே.

மேற்படி ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீகரித்தவுடன்

பாடிய வெண்பா.

102 சூரியமுட் கொண்டே குவலயத்தோர் தாள்தைத்த
வீரிய முள்ளை விலக்கிடலால்—பாரதனில்
மாபா தகந்தீர்க்க வாறு சலமுனிவன்
மாபா தகந்தான் மருந்து

மா பாத கம்—ஸ்ரீபாததீர்த்தம்.

மேற்படி ஸ்ரீஸ்வாமி அவர்கள் 3-வது தடவல் உத்தரயாத்திரையாய் கும்பகோணத்துக்கடுத்த நாதன்கோயி லென்னும்நந்திபுரவிண்ணகரத்தில் எழுந்தருளியிருக்கும்போது விண்ணப்பம் செய்த பாடல்

சந்த விருத்தம்.

103 எந்தமத மண்டினரு நின்சிவிகை கண்டது
மெழுந்துபணி தன்மையமரும்
எந்தைவர மங்கைமுனி சிந்தையொடு வந்துதொழு
மிந்திரையி னண்ண லுறையூர்
கந்தமக ரந்தவர விந்தமது வுண்டளியு
கந்துமல ரன்னகரமேல்
நந்தமரு மங்கையர் குந்தளமடைந்துமூரல்
நந்திபுர விண்ணகரமே.

மேற்படி ஸ்வாமி ஸந்நிதியில் முன்பெற்ற சால்வை பொட்டு
விழுந்ததற்காகப் பாடிய

கலித்துறை.

104-சீரமங்கை கூப்பிக்கலியனைப் போற்றித் திரும்பியயாம்
வரமங்கையாரிய ! நின் சேவை கண்டு மனமகிழத்
தாமங் கண்ணாயிரம் வேண்டுமென்றெண்ணத் தமியனுடை
அரைமன்னு சால்வைகண் ணாயிரம்பெற்ற ததிசயமே !

திருவாலி திருநகரி திருமங்கை ஆழ்வார் உத்ஸவத்திற்குப்போய் மேற்படி ஆழ்வாரான கலியனைப்போற்றித் திரும்பிய யாம்.

ஷை பாடலைக் கேட்டுகந்து, உடனே ஓர் புதிய உயர்தரமான
ஸால்வை சாதித்தருளப், பெற்ற வுடன் பாடிய
வெண்பா.

105 பார்த்தவுடன், யாருமெனைப் பாவலனென் றெண்ணிடவும்
வார்த்தைசொலு முன்னும் மதிப்பளிக்கும்—பார்த்தோர்
புகழும் வரமங்கைப் புங்கவனும் யோகி
மகிழ்வுடனே தந்தருள்சால் வை

106 கற்ப தருவென்கோ? கடவுட் பசுவென்கோ?
மற்பொருதோள் மாலன்ன மஞ்சென்கோ?—விற்பனர்க்கு
வள்ள லெனநல்கு வானா சல முனிபால்
உள்ள வுதாரமதை யோர்ந்து

107 கங்கை சுதனென்கோ? காற்றின் சுதனென்கோ?
நங்கை சுதனென்கோ? நல்லவர—மங்கைதனில்
அஞ்சு புலன்றனக்கே யஞ்சுபுல னாச்செய்த
எஞ்சலிலா மாமுனியை யீங்கு

கங்கை சுதன்—பீஷ்மர். காற்றின் சுதன்—அனுமார். நங்கை சுதன்—நம்மாழ்வார்.

ஆழ்வார்திருநகரியில் திருவிசாகத் திருமஞ்சனம் சேவிக்கும்போது
பாடிய வெண்பா.

108 அஞ்சுமுக னாறுமுக னைமுகன் மான்மதப்பொட்
டஞ்சுமுகன் சேர்ந்திடு மெவ்வாலயத்தும்—மஞ்சனச்சீர்
செம்மைமகிழ் மாறன் திருவிசா கம்போல
இம்மகியி லெங்கு மிலை

மான் மதம்—கஸ்தூரி. அம் சுமுகன்.

நம்மாழ்வார் தீர்த்தவாரி மகிமையைப் பாடியது.

109 மாசி விசாகம் வசந்தரிது வாஞ்சிர்வை
காசி விசாகங் கவின்குருகூர்த்—தேசிகனே
டச்சங்க தீர்த்தநீ ராடிபுனி தர்க்குமிக்கார்
எச்சகத்து மொப்பா ரிலர்

110 முக்கிண்ணித் தீர்த்தருமே மோதிமகிழ் மாறன்முன்
மக்களுடன் மேல்வீழ்ந்து மண்டிமிதிக்—குக்கிரத்தைப்
பார்த்தவர்களேன்பழியார்? பாவாடை யன்னமதைப்
பூர்த்திவிநி யோகஞ்செய் போது

போலீஸ் டிப்டி ஸூப்ராண்டு ஸ்ரீமான் R. நாராயணய்யங்காருடன் தெப்ப உத்ஸவம் (1—3—1929-ல்) ஸேவிக்கும்போது பாடியது.

கலித்துறை.

111 பொருட்டிறத்தாற் றெய்வப் புஷ்பகம்போலப் பொருந்து தெப்பத்
தருட்டிரு நாரணற் காளாய தொண்ட ரகமகிழத்
தெருட்டிற மேறுந் திருவாய் மொழியெனுந் தேனளித்தோன்
இருட்டினு மாதவன்போற் றிகழ்ந்தானிவ் விருட்டினுமே!
இருள்தினும் (தின்னும்) ஆதவன்போல்.

இது முதல் ஐந்துபாடல்கள் ஆசிரியரின் சகோதரரும் நேட்டிவ் டாக்டருமான அ. கிருஷ்ணய்யங்கார் திருச்சியில் 1912-ம்வருஷத்தில் கேட்ட கேள்விக்கு விடை:—

கடைதலைப்பூட்டு வெண்பா.

112 சீதாற்குத் தோலாடை நீக்காற்குப் பொன்னுடை
மாதவற்குச் செங்கையிலே மான்மழுகங்—காதாற்கு
அத்தமதிற் சங்கமையு மாயனுக்கு மானமையும்
பித்தாற்குப் பூமாது பெண்டு

பூமாது பெண்டு சீதாற்கு என்று கூட்டிப் பொருள் கொள்க.

காவேரியில் கல்மிதக்கப்பாடியது

113 குங்குமம்பூ மாலைகனி கொண்டுவந்து நாதருடன்
பொங்குபுனற் காவிரியைப் பூசித்தே—யிங்குநலா
நன்மதியா மின்றண்ணே! நாரியர் நீ ராடவலங்
கன்மிதந்து போவதுநீ காண்

அட்டமியில் அமாசை வரப்பாடியது.

114 வட்ட மதியிரவி வாய்கண்ண னுங்கண்ணன்
சிட்டன் வசுதேவன் சிரகத்தில்—அட்டமியில்
தானவதா ரஞ்செய,வத் தன்மையுணர் சீரியர்கள்
ஏனுரையா ரன்றுவா வென்று?

இதுவுமது.

வைக்கமதி யட்டமியில் வானவரும், மானவருஞ்
சிக்கம் பிறைசூடு தேவனையே—தக்க
தினகரனை முன்னிட்டுச் சேவித்தா ரந்தத்
தினமதையு வாவென்பேன் தேர்ந்து

ஆகாசத்தில் தாமரை பூக்கப்பாடியது

கலித்துறை.

115 அம்பரந்தா மரைபூத்தன வென்று மதிசயங்கேள்
கும்பநல் வாரணம் மூலமென்றே தனைக்கூப்பிடுங்கால்
தும்பியைக் காக்க விண்புள்ளரசேறித் துலங்கரியின்
அம்பகம் பாதகரமுக கஞ்சமலர்ந்தனவே

ஓர் நண்பர் கேள்விக்குக் கையிற் கடலடங்கப்பாடியது

வெண்பா.

116 செந்திற் கடற்கரையிற் சேர்ந்திடுமென் னண்ப! வெனைச்
சந்தித்துக் கேட்டதற்குச் சாற்றுகின்றேன்—சந்ததமும்
மையணுகு சோலை மலயமதில் வாழ்முனிவன்
கையிலடங் கிற்றிக் கடல்

இதுவுமது.

117 தென்பேரை யூரிற் றிருவாய் மொழித்திருநாள்
அன்பா!—நீ சேவிக்க அண்டுவையேல்—முன்பேநம்
பார்ப்பார் கரத்திற் பலகடலை யாங்கமைப்பப்
பார்ப்பாயக் காலம் பணிந்து

திருநெல்வேலி மாணவர் தமிழ்ச்சங்கக் காரியதரிசி
C. S. இராமலிங்கம்பிள்ளையவர்கள் முன்புக்கு பாடிய

வெண்பா.

118 கம்பரது வீட்டுக் கட்டுத்தறியும் பாச்சொலுமென்
றிப்பர் மொழித விராமலிங்க !—நம்பு
புலவனெனு மென்பாற் பொருந்திய விப் போர்வை
புலவர்கோ னாகியதிப் போது

புலவர்—வித்வான்கள்; தேவர்கள். புலவர்கோன்—தேவேந்திரன். (ஆயிரங்கண் ணாயிற்று.)

ஷை பிள்ளையவர்கள் ஆசிரியரைப்பார்த்து இன்று தை அமாவாசை ஆனதால் கோயிலில் பத்ரதீபம் பார்க்கப்போவோமென்று ஆசிரியரைப் பார்த்துச் சொன்னபோது பாடியது.

119 நெல்வேலி யூரார்க்கு நித்த மமா வாசையென்றே
சொல்வே னிராமலிங்க தூயகுணச்—செல்வா! கேள்
கோவூர் திவாகரனைக் கூறுமெழிற் காந்திமதி
ஆவிமெய்போ லென்றுமொன்ற லால்

கோவூர் திவாகரனை—ஆகாசத்தில் நகரும் சூரியனை; கோவூர்தி வாகு அரனை—ரிஷபவாகனனான அழகிய நெல்லை அப்பனை. காந்திமதி—கிரணத் தோடுகூடிய சந்திரன்; காந்திமதி அம்மாள். உடலும் உயிரும் போலச் சேருகையால்; நித்தம் அமாவாசை யென்பேன். (சூரியனும் சந்திரனும். சேருகிறதினம் அமாவாசை,)

ஷை பிள்ளையவர்களுடன் கோயிலுக்குப் போன இடத்தில் பாடியது.

120 மாவிந்தை நெல்லைநகர் வைணவன் வைணவர்க்குக்
கோவிந்த ராஜனெனுங் கோலத்தான்—மேவுந்தம்
நெஞ்சினினைப் பார்க்கப்ப னீணிலத்தி லேழையராய்த்
தஞ்சமடைந் தார்க்கவன் தாதா

வைணவன்-வேணுவினின்று வந்தவன். (தத்திதாந்தம்) வைணவர்க்கு நெல்லைக்கோவிந்தராஜன். நினைப்பார்க்குநெல்லையப்பன். தஞ்சமடைந் தார்க்கு அவன்தாதா—உதாரன்; பிரமன். மும்மூர்த்தியாகப் பாடியது.

1913-ஆு டிஸம்பரில் நடைபெற்ற திருநெல்வேலி மாணவர் தமிழ்ச் சங்க 3-வது வருஷோத்ஸவத்தில் ஷையூர் சித்திரப் போதகாசிரியரும் ஆசிரியருக்கு ஆருயிர் நண்பருமான ஸ்ரீமான் தொண்டைமான் முத்தையா அவர்கள் உண்மையைப்பற்றிப் பேசியபோது

பாடிய வெண்பா.

121 உண்மையிலா னென்ற னுயிர்த்துணைவன் முத்தையா
உண்மை விடயமெடுத் தோதினான்—வண்மைமிகு
நெல்லைமா ணக்கரவை நேர்ந்தபெரி யோரமுதாம்
நல்ல மழை யென்ன நயந்து

உண்மையிலான்—உள்கறுப்பில்லாதவன். உண்மையிலான் உண்மையைப்பற்றிப் பேசியது ஆச்சிரியமென்னும் தோற்றம்.

திருநெல்வேலி ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் சாது கணபதி பந்துலு அவர்களோடு நதியில் நிலாவில் பேசிக்கொண்டிருக்கையில் நிலவைப்பற்றி அன்னார் வேண்டுகோளின் பேரில் பாடியது

122 வாதமதா லெந்த வழக்கினையும் வெல்லுமுன்றன்
போதமதா லுண்டாம் புகழினையே—மேதினியோர்
சந்திரிகை யென்றுரைப்பார் சாது கணபதியாம்
சந்திரனே! இச்சொல் தகும்

இதுவுமது

123 மாசணுகா வுன்றன் மதியே மதியென்று
காசினியில் யாருங் கழறுவதை—மாசுமதி
தானுணர்வான் வந்தடைந்தான் சாது கணபதியே!
வானிரவு வாய்ந்துநில வாய்

1929-ம் வருஷத்தில் சென்னைக்கடற்கரையில் லெக்ஷிகன் ஆபீசரும் ஆசிரியருக்கு நண்பருமான திருநெல்வேலி B. A., B. L., வையாபுப் பிள்ளையவர்களோடு உலாவிக்கொண்டிருக்கும் போது கடற்கரையில் பொருத்திய லயிட்டைப்(விளக்கை) பார்த்துப் பாடியது

124 சென்னைக் கடற்கரையிற் சேர்ந்திடுமிம் மின்சாரம்
மின்னியொளி வீசிவ் விளக்கினணி—இந்நிலமின்
மெய்யா மருங்கிலணி மேகலைபோற் காண்பது பார்
வையா புரிமன்ன வா !

கடல் பூமிக்கு வஸ்திரமாகவும் அதன்மேல் திகழ்விளக்கணி ஒட்டியாணம்போற் காண்பது பார்.

திருவானைக்காவில் 2-வது தடவல் பாடிய வெண்பா.

125 ஈண்டரங்கன் தாளே யெதிர்நோக்கு மானைக்காப்
பாண்டரங்க ! பித்தனெனப் பாரிலுனை—வேண்டியநற்
பாவலருங் கூடப், பகர்ந்திடினு மூர்மெச்சு
நாவலனீ யென்றுரைப்பன் நான்

நாவலன்—வித்துவான்; நாவல் மரத்தடியிலிருப்பவன் (ஜம்புகேச்வரன்) "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி. துயில் பவன் அரங்கன்" திருவானைக்காச் சிவன்கோயில் மேற்கு நோக்கியிருத்தலால் அரங்கன் திருவடியையே எதிர் நோக்கல். "பித்தாபிறை சூடீ" யென்றனர்; சமயக்குரவர்.

திரிசிரபுரம் உச்சிப்பிள்ளையார் பேரில் விருத்தம்.

126 தேங்கமழ் மலர்ப்பூந் சோலைத் திரசிரபுரவெற்புச்சி
ஈங்கமை நன்மதஞ்சே ரிபமுகமுடையான் யார்க்கும்
ஆங்களி கொள்வரங்க ளருளினும் மதம்வேறுய
ஆங்கிலக் கொடியா னென்றே யவன்றனைச் சொல்லார்யாரே?

ஆங்கிலக்கொடி யெடி பிள்ளையார் கோவில் விமானத்தின்மேல் அமைக்கப்பட்டிருப்பது குறித்து.

திருவாரூரில் தேரெரிந்த இடத்தைப்பார்த்துக் கூறிய
வெண்பா.

127 தேவரிறை வன்வனத்தைத் தீக்குணவா யன்றளித்த
தேவன்போ லாரூர்த் தியாகேச!—பாவகற்குன்
பேரிரத மீந்தனையோ? பித்தா! புராந்தகனே!
பாரிரதத் தாசை படிந்து

பாவகற்கு—அக்கினிக்கு.
முப்புரம் எரிக்குங்காலத்தில் பார் இரதமாக இருந்தது.

ஷையூர் கோயில்முன் பாடியவை.

128 ஆரூரோ வூராம், அமைந்திடுமே யொற்றியூர்
ஊரூரா யோட்டிலிரந் துண்டவனைக்,—காராடு
வெள்ளா டெனக்கழறு மேதினியோ ரென்மொழியார்?
எள்ளாத் தியாகேச னென்று.

ஷை

129 தங்கத்தனு வுடையான் சார்ந்திடுபொன் னம்பலத்தான்
பொங்குகதிர் வெள்ளிப் பொருப்புடையான்—துங்கபணி
வாய்ந்திடுமா ரூரனை மாநிலத்தோர் வாழ்த்தறதும்
ஏய்ந்திடுதி யாகேச னென்று

தங்கத்தனு—பொன்னார்மேனி; மேருவில். வெள்ளிப்பொருப்பு—கைலை மலை.

திருப்புல்லாணியில் தாயார்பேரில்.

130 இத்தலத்தி லன்பர்க் கினிய வசனி குணப்
பத்த ரிடராம் பணிக்கசனி—பத்தியிலாத்
தீயார்க்கு மிக்கசனி தென்திருப்புல் லாணியில்வாழ்
தாயாம் பதுமா சனி

காளமேகம் பாடியது.

131 " மீனமுக மாமைமுகம் மேதினியெல் லாமிடந்த
ஏனமுகஞ் சிங்கமுக மென்னுமல்—ஞானப்
பழகரென்றும் பண்பரென்றும் பாரதனினிற்கிங்
கழகரெனும் பேரிட்டார் ஆர் "

மதுரையில் ஓர் நண்பர் ஷை பாடல் மாதிரி அழகிய சொக்கருக்குப்
பாடவேண்டுமெனப் பாடிய விருத்தம்.

131-A செஞ்சடையன் குறைமதியன் தீக்கட்பாலன்
சிரங்கைக்கொண்டோன் பெருவேதனையே யுற்றான்
அஞ்சுமுகன் கரித்தோலன் விலங்குக்கையன்
அரவணிந்தோ னெப்பொழுது மழுகையார்ந்தோன்
நஞ்சருந்தி நாடுபுரஞ் சுட்டபித்தன்
நக்கனெனத் தோன்றுகயற் கண்ணிநாதற்
கெஞ்சலிலாத் தென்மதுரை நகரந்தன்னில்
எழிற்சொக்க னென்று பெயரிட்டார் யாரே?

இச்செய்யுள் நிந்தாஸ்துதி, விஜயஸ்துதி யென்றும் கூறுவர்; அணி யுணர்ந்தோர் வஞ்சப்புகழ்ச்சியணி யென்பர்.

குறைமதி—அற்ப புத்தி: பாதிச்சந்திரன் தீக்கட்பாலன்—கொடிய கண்ணுடைய பையன்: நெருப்புக்கண் அமைந்த நெற்றியுடையவன். சிரங்கைக்கொண்டோன்—சிரங்குநோயுடையவன்: பிரமன் கபாலம் கைக்கொண்டவன். பெருவேதனையே யுற்றான்—பெருந்துன்பமுடையவன்: மூங்கிலில் உற்றவன். அஞ்சுமுகன்—பயப்படும்படியான முகன்: ஐம்முகன். கரித்தோலன்—கறுப்புத்தோலுடையவன்: யானைத்தோலைப் போர்த்தினவன். விலங்குக்கையன்—கையில் தளையுடையவன்: மானைக் கையிலுடையவன். எப்பொழுது மழுகையார்ந்தோன்—அழுகையார்ந்த உருத்திரன்: மழு கையார்ந்தவன். நாடுபுரம் சுட்ட பித்தன். நாடுகின்ற புரத்தை; முப்புரத்தை யெரித்தவன். நக்கன்—ஆடையில்லாதவன்: திக்குகளை ஆடையாகவுடையவன். கயற்கண்ணிநாதன்—மீனாட்சிநாதன். எழிற்சொக்கன்—அழகிய சொக்கனென்று; சுந்தரேசனென்று பெயரிட்டார் யாரே?

திருமாலிருஞ்சோலைமலை அழகர்பேரில் வெண்பா.

132 கலையழகா ! மெய்யழகா ! கையழகா ! சோலை
மலையழகா ! வாயழகா ! மாவாழ்—மலர்போல்
திருக்கழகா ! வென்னை யுன்றன் சேவைதந்தாளாமற்
கருக்குழிக்கா ளாக்கலழ கா !

திருக்கு—கண்.

கூடல் அழகர்பேரில் வெண்பா.

133 அழகாகா நெஞ்சே ! யனுதினமுங் கூடல்
அழகா ! கா வென்றவன்றாட் காளாப்—பழகாமல்,
கா ! கா ! வென் றேதிரிகா கம்போற் சேர்ந் தற்பரையே
கா ! கா ! வெனச்சொல்லுகை

திருமோகூரில்

134 வாசமலர்ச் சோலை தடம் மன்றியிளந் தென்றனிதம்
வீசிடுமோ கூர்க்காள மேகமென்றன்—மாசில்
மனக்கா மகிழ்ந்துறலால் மானவருள்தேர்ந்தோர்
எனக்காள மேகமென்பா ரிங்கு

கன்னியா குமரியில்

135 கொங்கு கமழுங் குமரிக் கடல்மூழ்கி
அங்கு மரியி னடியிணையாஞ்—செங்கமலம்
என்ற னிதயத் திருத்தினேன் பாவமெலாம்
பொன்றி யொழிந்திடவப் போது

அம்குமரியின்; அங்கும் அரியின்.

திருச்செந்தூரில் தாசில்தார் ஸ்ரீமான் திருவேங்கடத்தையங்கார் அவர்களுடன் கந்தசஷ்டியில் சூரஸம்ஹாரம் பார்க்கும்போது பாடிய கலித்துறை.

136 மாறனை வென்ற குமாரனை வள்ளிதெய்வானை யிரு
தாரனை நாலுமுத்தா ரனை மெய்தனிற் றக்கவலங்
காரனைச் சூரசங்காரனை வெய்ய கபடருக்குத்
தூரனைச் செய்ய செந்தூரனை நாடித்துதிமனனே!

கலி விருத்தம்.

137 புனமேவிய தினைக்காத்திடு நயனும்புய வளிபால்
மனமேவிய மயல்மீறிடு குகனுர்கர வடிவேல்
தினமேயவர் பததாமரை திரமேயெனு மடியார்
அனைவோர்வினை பிணியாவையு மடிவோர்கெலி விடுமே

ஷை தாசில்தாரவர்களுடன் ஷையூர் ரெங்கநாதனைச் சேவிக்கும் போது பாடிய வெண்பா.

138 தீதுவனஞ்சென்ற சிரமமுறச் செந்தூரில்
ஆதரவாக் கண்டுஞ் சரங்கேச! —மாதலனும்
பந்துவெனும் சீயூர் பதுமையுங்கண் பார்த்தருளக்
கந்தனுக்கேன் சீர்மைபெரு காது?

1925–ம் ஆசிரியா பேப்பர் பார்த்து சிதம்பரத்திலிருந்து எழுதி T. K. C. க்கு அனுப்பிய விருத்தம்.

139 தில்லைவாழு மாதவன் திருவுளத்தினன்பினுல்
நல்லவன் குமாரசாமி நண்பனேடு நிற்குமே
அல்லலின்றி மெய்பாா யமைந்தநேர்ந்துகந்தனன்
செல்வமா வளர்ந்திடுஞ் சிதம்பரேச நண்பனே!

உமாதவன்—மாதவன், நடராஜன்; கோவிந்தராஜன்.

டி. ஸ்ரீமான் T. K. சிதம்பரநாதமுதலியாரவர்களோடு
பேசிக்கொண்டிருக்கையில் கூறிய வெண்பா.

140 சிரிசையிங் கோங்குஞ் சிதம்பரநா தன்தனுவில்
சாருங் குணமொன்றே, தக்ககுணம்—பாரில்
இழுக்கை யடையு மிரவிகுல ராமன்
கொழுக்கைத் தனுவின் குணம்.

தனு—சரீரம்; வில். இழுக்கை—குற்றத்தை; இழுத்தல். குணம்—நற்குணம்; வில்லில் பூட்டும் நாண்.

(ஓர் சமயம் தம் வீட்டுவேலைக்காரன் பிச்சக்கோனைப் பார்த்துக் கூறிய
சொற்கள் ஓர் வெண்பாவாக அமைந்தன காண்க)

வெண்பா.

141 ஆலம் குளிர்காலம் காங்கையுறு தேகமெனக்
காலமென வாடை அடிக்கிறது—நீலப்
பெரிய விரிப்புதறிப் பின்புவிரி, பிச்சா!
விரியை யெடுத்து விடு

ஆலம்—விஷம். விரி—திரை.

அம்மானை ஸ்ரீவைகுண்டம்.

142 வாரி நலப்பொருளை வைகுந்தம் வாழ்திருமால்
சீரிய பொன் னுடையுறும் செல்வன்காண் அம்மானை
சீரிய பொன் னுடையுறும் செல்வனே யாமாகில்
காரிகையாராடை கவர்வனோ? அம்மானை
கள்ளப்பிரான் தான் கவரானோ? அம்மானை

திரு வரகுணமங்கை.

143 மானைமுன மெய்த வரகுண மங்கைத் திருமால்
கானிற் பலவுயிரைக் காய்ந்தனன்காண் அம்மானை
கானிற்பல வுயிரைக் காய்ந்தனனே யாமாகில்,
தானுமொரு வேடனெனச் சார்ந்தனனோ? அம்மானை
தான் வேடன் தந்தை தவவேடன் அம்மானை

வேடன்—வேள்தன். தவவேஷன்.

திருப்புளியங்குடி.

144 பூசுரர்க ளேத்தும் புளிங்குடி வாழ் மாயவனைக்
காய்சினவேந் தென்றே கழறுவாரம்மானை
காய்சினவேந் தென்றே கழறுவாராமாகில்,
காசினியோர்க்குக் கருணை காட்டுவனோ? அம்மானை
காங்குவித்தோர்க்குக் கருணைகாட்டுவன்காண் அம்மானை.

காங்குவித்தல்—கைகூப்புதல்; வரிப்பணம் கொட்டுதல்.

திருத்தொலைவில்லிமங்கலம் (இரட்டைத்திருப்பதி)

145 தோற்றுமணிமாடத் தொலைவில்லி மங்கல மால்
ஆற்றினடுவில் அமர்ந்தனன்காண் அம்மானை
ஆற்றினடுவில் அமர்ந்தனனே யாமாகில்
ஆற்று வெள்ளங் கண்டமட்டு மண்டாரோ? அம்மானை
அண்டுமென நாவாய் அடைந்துகந்தான் அம்மானை

நாவாய்—தோணி; திருநாவாய் என்னும் க்ஷேத்திரம்

திருக்குளந்தை (பெருங்குளம்)

146 "கொண்ட லெனவாழ் மாயக்கூத்தன் திருமுகத்தைப்
புண்டரிக மென்றே புகல லாம் அம்மானை
புண்டரிக மென்றே புகல லாமாயாகில்,
வண்டணுகு செங்கமலம் வாடாதோ? அம்மானை
வாடுமோ? பெருங்குளத்தில் வாழ்ந்தக்கால் அம்மானை"

புண்டரிகம்—தாமரைப்பூ.

தென்திருப்பேரை.

147 பூந்துளவன் தென்பேரைப் புங்கவன் மண் மாவலிபால்
ஏந்துகரத்தானு லிரந்தனன்கா ணம்மானை
ஏந்துகரத்தானு லிரந்தனனே யாமாகில்,
மாந்தர் பெருங் கன்னனென வாழ்த்துவரோ? அம்மானை
வாழ்த்தல் படியளக்க வாய்ந்ததனு லம்மானை

திருக்கோளூர்.

148 ஈசனிரப்பொழித்த வெங்கள் வைத்தமாநிதி மால்,
பாசமற்ற பொல்லாப் பழியறியா ரம்மானை
பாசமற்ற பொல்லாப் பழியறியாராமாகில்,
கூசாமல் மாமனைமுன் கொல்லுவதேன் ? அம்மானை
கொல்லாரோ ? கோளூரிற் குடியிருந்தால், அம்மானை

திருக்குருகூர் (ஆதிநாதர்பேரில்.)

149 சேக்கைக் குருகூர்த் திருச்சங்கணித் துறையில்
கோக்குந் தாளம் கொழிக்குமா றம்மானை
கோக்குந்தாளம் கொழிக்கு மாறுமாயின்
தாக்குவடமா மாற்குச் சாத்தாரோ ? அம்மானை
தானே முத் தாரனுச் சார்ந்தனன்காண் அம்மானை

முத்தாரன்–முத்து ஆரன்; ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியான மூன்று
தேவிமாரை உடையவன்.

வானமாமலை.

150 மிக்கவெண்ணெய் மேனி மிளிர்தெய்வ நாயகனைத்
தக்க மலைவிளக்காய்ச் சாற்றலாம் அம்மானை
தக்க மலைவிளக்காய்ச் சாற்றலா மாமாகில்,
சொக்கமையு மவ்விளக்கைத் தூண்டுவார் ? அம்மானை
தோதாத்திரி யமைந்தால் தூண்டுவதேன் ? அம்மானை
தோதாத்திரி–வானமாமலை.

திருக்குறுங்குடி.

151 பாடற் பாகாலன் பா மதுவைக் கொள் நம்பி
வேடக் குகன்மதுவை வேண்டியுண்டான் அம்மானை
வேடக் குகன் மதுவை வேண்டியுண் டானுமாகில்,
ஈடில் வெறிதலைக் கேறாதோ ? அம்மானை
ஈங்கு குறுங்குடியற் கேறுமோ ? அம்மானை

விடு கதைகள்.

152 முன்னெழுத்துத் தேவதரு, நடுமூங்கில்; பின்பு, ரியாம்,
மூன்றுஞ்சேர்ந்தால்,
நன்னதியாம்; முதலெழுத்து நீங்கின், மணத் தின் பேராம்,
நடுவே நீங்கின்,
கன்னனிகர் வள்ளலென்றும்; மகிழ்மாறன் தந்தையுமாம்,
கடையே நீங்கின்,
உன்னதச் சோலையை விளித்தல், காவேரிரங்க ! இதை
உணர்வாய் நீயே,

(விடை, காவேரி)

153 முன்னமொரு மூன்றெழுத்தாய்ச் சிவன்பேராகும்
முதலெழுத்து, கடவுளைப்பார்த்துரைப்பதாகும்
மன்னுகடை, பரியின்பின் பாதியாகும்
மத்தி, திரு; வாசி; கரி; மரத்தொன்றாகும்
முன்னெழுத்து நீங்கின், மழை; மத்தி நீங்கின்,
மூதுலகிற் சனியின்பேர், அந்தம் நீங்கின்,
கன்னலுள மன்மதனை விளித்தலாகும்,
காமாரியன்ப ! இதன் கருத்தோர் வாயே

காமாரி—(காம அரி) சிவன். திரு—இலக்குமி. வாசி—குதிரை.
கரி-யானை. மரம்-மாமரம். காரி—சனி.

(விடை—காமாரி)

154 முன்னொரு பாவின் பேராம், முதலெழுத்தில்லாவிட்டால்,
நன்னயவித்தின் பேராம்; நடுவெழுத்தில்லாவிட்டால்,
கன்னலின் சரிதைப் பேராம்; கடையெழுத்தில்லாவிட்டால்,
பன்னலிற் குரங்கின் பேராம்; பாவின் பேர் விளம்புவீரே

(விடை—கவிதை)

155 முன்னொரு பாவின் பேராம் முதலெழுத்தில்லாவிட்டால்,
இந்நிலத்தேவற் பேராம் இடையெழுத்தில்லாவிட்டால்
சொன்னவோ ராயுதப் பேர் தொலையெழுத்தில்லாவிட்டால்,
கன்னலின் பாவின் பேராம் கவிதைப் பேரறிமின் நீரே!

(விடை—கவிதை) விதை, கதை, கவி.

156 முன்னமோர் மரத்தின் பேராம் முதலெழுத்தில்லாவிட்டால்,
நன்னய விளக்குக் கேற்கும் நடுவெழுத்தில்லாவிட்டால்
சொன்னய மனைவி பேராம் தொலையெழுத்தில்லாவிட்டால்,
மன்னிய பங்கின் பேராம் மரத்தின் பேர் விளம்புவீரே!

(விடை—பாதிரி) திரி, பாரி, பாதி

157 ஸ்ரீவைகுண்டம் வைக்கீல் ஸ்ரீமான் பொன்னம்பலநாத முதலியாரவர்கள் ஒருநாள் இரவில், பெருமாள்கோவிலில் சாப்பாடு செய்வித்ததில் அவர்களிடம் பாடிய வெண்பா.

தங்கலிலே மண்ணுண்டான் சந்நிதியின் மேவியநே
கங்கலுடன் நெய்சர்க் கரை சேர்ந்த—பொங்கல்
பரிந்துண்டேன் பொன்னம்பலநாத நண்பா!
விரிந்த வுவகை மிகவே

(தங்கு அல்லிலே. அநேகம் கல்லுடன்.)

158 படித்தவனும் பொன்னம் பலநாத ! நின்னை,
படித்தும் படியா தவனு—எடுத்துரைப்பேன்
செய்யா ளருள்சேரித் திண்புவியோர் சொய்பழத்தைக்
கொய்யாப் பழமெனவுட் கொண்டு
படியாதவனுக; படி ஆதவனுக (ஆதவன்—சூரியன்.)

சென்னை மாகாணக் கவர்னர் கோஷன் பிரபு துரையவர்கள்.
1926–ம் ஆண்டு தூத்துக்குடியில் விஜயம் செய்தபோது ஷை யார் முன்னிலையில் பாடிய விருத்தம்.

159 உத்தமநற் சிந்தைசொல் செய்கை கொண்டே
உபகாரகுணத்தாலு மன்பினுலும்
எத்தலத்தும் மாந்தருளம் கவருந்தன்மை
இசைந்திருப்ப தோர்ந்துமதிக் கோஷ ! நின்னைக்
கத்துகடற் சென்னையெனு மாகாணத்தில்
கவர் நாதிபனுச் செய்வேந்தர் வேந்தும்
இத்தலத்துன் வரவுகந்தோர் யாரும், நீயும்
இனிது மனை மக்களுடன் வாழ்க! வாழ்க!
கவர் நாதிபன் (வினைத்தொகை.) கவர்நர் ஆதிபன் (பண்புத் தொகை)

ஷை கவர்னர் ஆசிரியரைமெச்சிக் கைகுலுக்கியதைப்புகழ்ந்து சில அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கையில் பாடிய கைச்சிறப்பு.

160 அன்னளயனுர் பொருத்தியகை;
அப்பால் சிவனுர் திருத்தியகை;
பொன்னுர் மகுடஞ் சார்ச்சரசன்
புனைநாள் விருதுப் பூணணிகை;
பின்னுள் கோஷனெனுங் கவர்னர்
பிடித்துள் ளுகந்தே குலுக்கிய கை;
எந்நாளும் மாலடியாரை
இனிது தொழுங்கையென்கையே !

சிவனுர் திருத்தியகை:— ஓர் சமயம் ஆசிரியர் கைமுறிந்த போது சிவனுர் என்னும் முடவைத்தியன் சீர் திருத்திய கை.

ஆழ்வார்திருநகரியில், ஸ்ரீ நம்மாழ்வார் மங்களாசாஸநத்திற்காக
11—12—1934-ல் எழுந்தருளிய காஞ்சீபுரம், பிரதிவாதி
பயங்கரமடாதிபதி ஜகத் குரு, ஸ்ரீ அநந்தாச்சார்ய ஸ்வாமிகள்
ஸந்நிதியில் விண்ணப்பம் செய்த ஆசிரிய விருத்தம்.

161 சீர்கொண்ட விபகிரியில் வாழண்ணர் மரபினில்,
செனித்திலகு திண்கேசரி;
திரமிடம், வடமொழி, ஹிந்தி, மாராட்டிரம்,
தெலுங்காங்கி லங்களென்னும்
பேர்கொண்ட விவையெலாம், நன்குணர்ந்தங்கங்கு
பிரசங்கமாரி பொழிவோன்;
போதிசேடனே யபராவதாரமாப்
பேருலகில் வந்துதித்தோன்;
தார்கொண்ட சடகோப எதிராஜ வரயோகி
சந்ததந்திகழு நெஞ்சன்;
தாரணியி லொப்பாரு மிக்காரு மிலையென்ற
சகலகலை தேர்ந்த மதியோன்;
ஏர்கொண்ட லோககுருவெனு மநந்தாசார்யன்;
எழுந்தருளு நல்வரவினால்
இன்று குருகாபுரியிலொன்று மடியேங்களுளம்
இன்பமுற லெல்லையிலையே !

கேசரி—மகிழம்பூமாலையணிந்த நம்மாழ்வார், (கேசரம்—மகிழ்); இபகிரி ஹஸ்திகிரி (என்னும் காஞ்சீபுரத்தில் உதித்த) சிங்கம்.

ஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின்
6—3—1935-ல் எண்பதாம்பிராய நிறைவு விழாவில் இயற்றிய
பன்னிருசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

162 சீர்மேவு வேதியர் குலப்பாவையிற் கலைத்
திங்களென வந்துதித்தோன்
செந்தமிழ்க்கலையினைக் கரைகண்ட கத்தியன்
சேடனிரு விசாகரன்னோன்
தார்மேவு தமிழணங் குக்குமணிமேகலைச்
சங்கநூலணி தரித்தோன்;
சாருமவளானனத் திலகமெனவாய்ந்தவன்;
தன்குருவின் மகிமை மொழிவோன்;
பார்மேவு மாசராற் பெரியரால் விருதாய
பட்டங்களுற்ற புகழோன்;
பதினாறுகலைமதியை யாயிரங்கண்டவன்;
பரஞ்சுட ரிலங்கு நெஞ்சன்;
ஏர்மேவுசாமிநா தையரெனுமபிதானன்
எண்பதாம்பிராய நிறைவாம்
இன்றுநிறை மன்றுளினி லொன்று யாமின்பமுற்
றிறைஞ்சினமவனடியையே.

இருவிசாகர்:—

(முருகன், நம்மாழ்வார்.)

ஆழ்வார்திருநகரியில், வானமாமலை ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிக்கு
10–6–35–ல் நடைபெற்ற சதாபிஷேக மஹோத்ஸவத்தில்
இயற்றிய

ஆசிரிய விருத்தம்.

163 திருவகுள மாலையன தாலயத் தன்புடன்
சீர்மணிய வேலைபார்த் தோன்;
சீதரன் சடகோப யெதிராஜ கூரேசர்
செய்யகுரு வாழுநெஞ்சன்;
திருமலைப் பேர்ச்சுதன் மற்றுமுன் புதல்வரும்
செய்சதாபி ஷேக நன்னாள்
சேரு மீரைந்துநா ளிருமறைகளிகதைகள்
ஸ்ரீபாஷ்ய மும்முழங்க
அருசெவியினுண் டுளம் பூரித்த வன்; ஞான
ஆசார்ய திலகரான
அண்ணங்காசார்ய னேய்ந்ததன் னாச்சார்யன்
ஆசிபெறு மகிமை யாளன்;
மருவுகலை நிறைமதியை ஆயிரங்கண்டவன்;
வானமாமலை யாதியில்
மன்னுமெஞ் சீநிவாசப்பெயர் கொளந்தணன்;
மலரடி வணங்கு வாமே

ஆழ்வார்திருநகரியில், காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம்
மஹாவித்வான் ஸ்ரீமான் அண்ணங்கராச்சார்ய ஸ்வாமியின்
பிரசங்கமுடிவில் கூறிய

வெண்பா.

164 சாற்றவொணு மான்மியங்கொள் மங்கலாசாஸநத்தின்
ஏற்றமெனு மின்சுவையீங் கீந்தனரால்—ஆற்றலுடன்
எண்ணெண் கலைதேர்ந் திலகுமெழிற் கச்சிநகர்
அண்ணங்க ராசாரி யார்.

இதுவுமது.

165 அண்டபுக ழுண்ணங்க ராசார்ய னின்மொழியாம்
கண்டிரசங் கொள்காதே காதாகும்—பண்டிதர்காள்!
ஆகாது போகா தழுகா தொழுகாது
வேகாது மற்றவை பூமேல்.

சங்கரன்கோயில் தாசில்தார் ஸ்ரீமான் திருவேங்கடத்தையங்கார் அவர்களுடன் கோயிலுக்குப் போயிருந்த சமயத்தில் பாடிய வெண்பாக்கள்.

சங்கரன் கோவில்.

166 தேகத்தோர் கோமதியைச் சென்னியிலோர் கோமதியைப்
பாகத்தோர் மாலே பணிமாலே—ஆகத்தே
பூண்டிலகு சங்கரனே! பூதேச தில்லைநகர்த்
தாண்டவ! யாம் வேண்டுவாம் தா.

கோமதி—அம்பாள் பெயர்; ஆகாசத்திலுள்ள சந்திரன். பாகத்து ஓர் மாலே-ஒரு பாகத்தில் மகாவிஷ்ணுவை. பணிமாலே-சர்ப்ப ஆரம்.

சங்கரநாராயணர் கோயிலில்.

167 மான் மழுசங் காழி வளையும் சடைமகுடம்
தேன்மருவு கொன்றை திருத்துளவம்—வான்மருவு
பொங்காவம் துங்கமணி பூண்டவ! யாம் வேண்டுவாம்
சங்கரநா ராயண! நீ தா.

அம்பாள் ஸந்நிதியில்.

168 திருவேங்கடத் தானைச் சீர்க்கவியோ ரன்பன்
உருவே யிரண்டுமொன்றென் றோதல்—பொருவுமிவண்
சங்கரியோர் பாகனது தையலே! கோமதியே!
சங்கரியே! வேண்டுவாம் தா.

கலித்துறை.

169 போசன் திருமலை ராசனுங் காளத்திப்புண்ணியனும்
பாசமிருந்த புகழ்சீதக்காதியும் பாருலகில்
ஆசுகவிப் புலவோர்க் களித்தா ரவர்போன்றவனும்
ஓசையுளான் திருவேங்கடத்தா னிங்கொருவனுமே !

170 வாரிதி நீரை நிதமே பருகு வடவையெனக்
காரியம் பார்த்துண்பர்தம் வயிறாக் கயவரென்போர்
பாரியமேக மனதிருவேங்கடப் பார்த்திபன்போற்
சீரிய ரீந்து புலவோரை நாளும் சிறப்பிப்பரே.

ஓர் சமயம்ஆசிரியர்க்கு அநீதியாய் தீமை விளைவித்தற்காகக்
கோபத்துடன் ஓர் கர்ணன்பேரில் பாடிய

கலித்துறை.

171 போவாய் சிறையிற் புகுவாய் நரகிற் புழுக்குடையச்
சாவாய் குலத்துடன் சீரழிவாயித் தரணிமிசை
தேவாதி தேவ னருளின்றி யேபெருந் தீங்கினுக்காள்
ஆவாயென் னன்றிமறந்தே வினைசெய் யழகப்பனே !

இக்கவி சொன்ன தினத்திலே ஷை கர்ணனுக்கு மனைவி யிறந்தா ளென்று தந்திவரவும் பின்னர் வேலையுந்தொலையவும் அப்பால் ஆசிரியரைச் சரணாகதி பண்ணி ஷை பாடலை மாற்றவேண்டுமென வேண்டியதன்மேல்

பாடிய கலித்துறை.

172 போகாய் சிறையிற் புகாய்வெந் நரகிற் புழுக்குடையச்
சாகாய் குலத்துடன் சீரழியாயித் தரணிமிசைச்
சீகாயமாய வருளொன்றியேபெருந் தீங்கினுக்காள்
ஆகாயென் னன்றி மறந்துபின்னோர்ந்த வழகப்பனே!

(28—12—1935)ல் நடந்த காங்கிரஸ் பொன்விழாவில் பாடிய
வெண்பா.

173 காந்திமதியுங் கனசங் கழும்படிந்து
சாந்த விதியென்றுஞ் சார்ந்துமே—ஏந்துபுகழ்க்
காங்கிரசு மூன்று கடவுளர்போல் வாழ்க நிதம்
ஈங்குபெரு வென்றியுட னேய்ந்து.

காந்திமதி—கிரணசந்திரன்; காந்திஜியின் புத்தி சங்கம்—சங்கு; சபைகள். விதி—பிரமன்; சட்டம். மும்மூர்த்திபோல் நிதம் வாழ்க.

174 பஞ்சப் பதமென்றே பாரோ ரிகழாமல்
வஞ்ச வினைவொழித்தே மாந்தர்காள்—எஞ்சலின்றி
ஆங்கில ரால் நன்மை யடைய விரும்புவிரேல்
காங்கிரசை யாதரியுங் கள்

ஆசிரியர் சுபத்திரா பரிணயமென்னும் நூலியற்றி யெழுதிவைத்
திருந்த புஸ்தகம் தவறிவிட்டதால்
ஏதோ ஞாபகத்திலிருந்த சில பாடல்கள் எழுதலாயின

காப்பு.

175 செய்ய சுபத்திரையின் சீர்வதுவை வெண்பாவாச்
செய்யவரு ணங்கமலத் தேன்பாயுஞ்—செய்யதனில்
நற்குருகு முத்தத்னை நத்தியெடுத் தொக்கி யுமிழ்
பொற்குருகை நாதனடிப் போது

அவையடக்கம்.

176 நன்னூலி லேனும் நயஞ்சிறிது மோராமல்
இந்நூ லினையா னியம்புவதாற்—றென்னூற்
புலவீ ரினத்தும் புதல்வர் மழலை
நலமெனவே கொள்வீர் நயந்து

177 உத்தரையின் செம்ம லுவந்தே சுபத்திரையாம்
உத்தமியின் மன்ற லுலகின்கண்—சித்தமொடு
கேட்க விரும்புகிறே னென்றான் கிளிமுனிபால்
தாட்கமலம் போற்றியே தாழ்ந்து

178 பத்தியுடன் கேட்கும் பரிட்சித்துக் கம்முனிவன்
சுத்த குலமின் சுபத்திரையை—யித்தலத்தில்
மாகதையைக் கொண்டோன்பின் வந்தோன் மணம்புரிந்த
மாகதையைச் சொல்வான் மகிழ்ந்து

நூல்.

தீர்த்தயாத்திரைக்காண்டம்.

179 இந்திரைதன் மந்திரம் போலெண்ணியே வைகுமெழில்
இந்திரப்பி ரஸ்த மெனுநகரம்—இந்த
நிலமின் மலர்முகம்போல் நேர்ந்தகுரு நாட்டில்
திலகமென வாய்ந்ததே சேர்ந்து

180 நேரிற் சரணமெனும் நீதிநிருபருடல்
ஆருயிரைக் காக்கும் அருளுடையான்—போரிற்
காத்திற் சிலையெடுத்தாற் கணரிகள் மைந்தர்
சிரத்திற் சிலையெடுப்பார் சேர்ந்து

சிலை—வில். கல்.

181 ஆருங்கலையோ ரறுபத்து நாலுளவாற்
பேரிசையைத் தன்குருவாற் பெற்றிடலால்—நேரிலுறு
மாசிலையாற் போகிவெகு மாணிக்கையா லிந்த
மாசிலையாற் கீடோ மதி

சந்திரன் விருத்தியக்ஷமான பதினாறு கலையுடையவன். குருவால் சாபமுற்றவன். மாசு—களங்கமுடையவன். போகியால்—இராகு வெனும் பாம்பினுல் பிடிக்கப்பட்டவன் அருச்சுனன்—64 கலையுளான் குருவால்—துரோணர் கிருபர் முதலானோரால் கீர்த்தி பெற்றவன். களங்கமில்லாதவன். போகி—இந்திரனுல் வெகு மானிக்கப்பெற்றவன். மா—சிலை காண்டீபம்.

182 பம்பரம்போற் சுற்றிப் பவமாங் கடலாழ்ந்த
இம்பரெலாம் நற்கரையி லேறுதற்கா—நம்பும்
இருங்கலமோ வென்று னிராம னிணையை
அருங்கலவை மார்ப னடுத்து

பிரபாச தீர்த்தம் ஆடியபின்

183 பலவலவ னூரும் பரவைசூழ் வையத்
தலவலவன் பின்தோன்றும் அண்ணல்—நலமருவும்
அத்தான் நினைத்த அவைக்கணத்திற் றானுமகிழ்ந்
தத்தானஞ் சேர்ந்தா னடுத்து

184 அப்பம் பணியார மார்ந்தோற்கு மெட்டானைச்
செப்பளிமொய்த் தோசைசெயுந் தேன்குழலுந்—துப்பனைய
வண்ண முறுக்கிதழும் வாய்ந்த சுபத்திரையின்
கண்ணிபெறு வோன் துதித்தான் கண்டு

இதில் பலகார வகைகள் தோற்றம்

185 கடலை யகழியெனக் காணந் துவரை
யுடையவனே! வானெல் லொளிபோற்—படைநேமி
உற்றவனே ! யோகியரிங் கோதுமைவண்ணா! வருளாய்
பற்றினரைக் காக்குமெனன் பா.

சில தானிய வகைகள் தோற்றம்.

பர்வதகாண்டம்.

இரைவத பர்வதத்தைப்பற்றி வர்ணித்தல்

186 கவணாரவேற் கண்மடவார் வீசுங் கலெட்ட
ருவிணிலுதி வான் வேந்த னுற்றுத்—தவழுஞ்
சிகரமதில் தேவர்முனி சீப்பிஞ்சி நீரந்
நகமதிலே சேரும் நயந்து

கவண் அரவேற்கண்மடவார் வீசும் கல் எட்டு அருவிணில்—விண்ணில் உதியாநின்ற வான்—பெரிய வேந்தன் சிகரமதில் தேவர் முனி சீப்பிஞ்சி நீர் அந்நகமதில் சேரும். கவணர் கலெட்டர் திவான் வேந்தன் முனிசீப்பு இஞ்சினீர் சீப்பிஞ்சினீர் இவ்வதிகாரிகள் பெயர் தோற்றம்.

187 நெய்தலுடன் சாரஸமும் நேர்ந்தகுளத் தன்னங்கள்
எய்துமின் பச்செடிசே ரெப்புறத்தும்—மைதவழும்
தூசாம்பா ராவாரஞ் சூழ்புவியாள் வேந்தா! வத்
தேசார் பருப்பதத்தின் சீர்

நெய்தல்-ஆம்பல், சாரஸம்—தாமரை. குளம்-பர்வதமடு. அன்னங்கள்—அன்னப்பட்சிகள் எய்தும் இன்பச்செடிசேர் மை—மேகம் தவழும், தூசாம் பாராவாரம்—சமுத்திரம் வேந்தா—பரீட்சித்து மஹாராஜனே ! பருப்பதத்தின் சீர்

நெய் ரஸம் குளம்—சர்க்கரை அன்னம்—சோறு பச்செடி சாம் பார் பருப்பு இந்த ஆகார வகை தோற்றம்.

188 மாத ரயிற்கண் மடவா ரொடு சிலரப்
பாதை மயிலெயெலாம் பார்த்துகந்தே—ஆதரவாய்த்
தந்தியின்மேல் தாம்பெற்ற பாலரையும் வைத்து வந்தார்
அந்த வரையி லடுத்து

ரயில் மயில் தந்தி தபால் தோற்றம்.

189 அந்தப் புரந்தனிலு மந்தப்புர மாந்தர்
அந்தப் புரந்தனிலும் அண்டுவதை—இந்தத்
திரைகடல்சூழ் பாரிற் சிறந்த சுக, மென்றே
உரையாதார் யார்தா முளர்

அந்தப்புரம்—ராஜஸ்திரீகள் வசிக்குமிடம்; அழகிய சரீரம்.
சுகம்—கிளி; சுகம்.

190 உண்டிலை யென்றே யுரைக்கின்ற சந்தேகம்
வண்டு விழியார் மருங்கிலே—அண்டித்
தரித்தங் கிராததுவுந் தாழ்மை யளிக்குந்
தரித்திரமெ னுந்தகைமை தான்

191 மருமலரோன் பற்குனற்கு வண்ணமிகச்செய் தான்
உருவிலியாம் பேரைச் யொழிக்கத்—திருமகள்சேய்
பார்த்தன் வடிவாப் படிதனில்வந் தானென்று
பார்த்தவர்க ளெண்ணும் படி

192 ஒன்னார் மனைவியர்க ளொண்களத்தி லேதிகழும்
அந்நாண லாலீ தறுபடா—தந்நாளிற்
பார்த்தன் களத்திற் பகழியொடு காதளவும்
போர்த்தனுவில் நாணிழுக்கும் போது

களம்—கழுத்து; யுத்தகளம்.

193 தனுவோ டிலகுந் தனஞ்செயனை நோக்கில்
முனையும் புரவலர்க்கும் மோகங்—கனிவான
மானேர் விழியார்க்கும் வாய்ந்திருந்த தானையெலாந்
தானே கலையுந் தளர்ந்து

தனு—வில் (காண்டீவம்) சரீரம்; தானை—படை; வஸ்திரம்.

அருச்சுனச் சந்யாசியைப்பார்த்து சுபத்திரை கேட்கிறாள்.

194 சித்தமதி லோரையங் கொண்டேன்யான் சீரியரே!
அத்தை யறிந்தே யகமகிழ—நத்தியெனைப்
பாரியா வெண்ணிவரும் பர்த்தா நீ ரென்றனக்கு
நேரீ லுரைப்பீர் நினைந்து

பதில்.

195 ஆதியுள நாற்சீரு மந்தத்து முச்சீரும்
மாதரசே! மாற்றிடினீ மற்றுள்ள—பாரத்தின்
அத்தத்தால் முன்பாவி லையந்தீர் வாயென்றான்
அத் தத்தை முன்பார்த்த னன்று

சித்தமதிலென்னும் ஆதிநாற்சீரும், நேரீலுரைப்பீரென்னும் அந்தத்து முச்சீரும், மாற்றிடில்; அத்தை—அத்தையாகிய குந்திதேவி அகமகிழ என்னைப்பாரியா வெண்ணிவரும் பர்த்தா நீரென்றனக்கு.
(என்பது பதில்)

சுபத்திரை தெரியாதவள் போலிருக்க.

196 நானே கிரீடி நலமாக நீயுமெனைத்
தானே, கிரீடியெனச் சாற்றியே—தானேநன்
முத்தினாஞ்சேர் முலையாளைக் கள்ளவெதி
முத்தினான் செய்ய முகத்து

(சந்திரோ பாலம் பணம்)

197 வித்தை புணர்ந்தோரு மித்திரனை வெய்யவனென்
றித்தலத்திற் கூற லிழிவென்றாள்—சித்தசவேள்
பூக்கணையால் துன்பமுறும் பூவையமைத் தன்கரத்தால்
தாக்குஞ் சசியைத் தவிர்த்து

198 மேயுங் கருந்தகரை வெண்டகரென் றுங்கொலைசெய்
தீய மறவரையுந் தேவரென்றும்——நேயமுடன்
கூறும் புவியோர் குளிர்மதியென் றேனுரையார்?
நீறுசெய்தீ யன்ன நினை

(பரிணய காண்டம்.)

199 அம்பஞ் சுளான்றேவி போன்றாட் கடியிணையிற்
செம்பஞ் சணிந்தனளோர் சிற்றிடையாள்—கொம்பனையாய்!
கோதிலா நின்தாட்கும் கொண்கனுக்கு மீங்கதிகம்
ஈதிரா கஞ்செய்யு மென்று

இராகம்—சிவப்பு; ஆசை.

200 முற்று முணர்விசயன் முட்டியள வேனுமிடை
யுற்றிருக்க லாமிவட்கென் றாகிப்பான்—மற்றொருத்தி
நங்கை சுபத்திரைக்கு நல்லமணி மேகலையை
அங்கையினாற் பூட்டினா ளாங்கு

201 செய்ய வளையுந் திருவா ழியுமவடன்
கையி லணிந்தோர் கருங்குழலாள்—தையலே!
ஒப்பிலா மாயோனைக் கொப்பாக வுன்காத்தைச்
செப்பலா மென்றாள் சிரித்து

வளை—சங்கு; கைவளை. ஆழி—சக்கரம்; மோதிரம்.

202 தங்க வரையழகைத் தாமே கவர்ந்தனவிக்
கொங்கைகளென் றெண்ணியோர் கொம்பனையாள்-அங்குவரை
மச்சமுங் கண்டு வரும்பின் பயமென்றே
கச்சணிந்தா ளக்காரி கைக்கு

வரை—மலை; வரைந்திருக்கின்ற மச்சரேகை; மச்சமும்—கவர்ந்தபொருளும். பயம்—பால்; பீதி; வருமென்றே கச்சணிந்தாள்; பால்வரும் என்பதற்கு-புத்திரவதியா யிருப்பாள்.

203 முத்தாரங் கன்னன் மொழியா ள்தனக்கணிந்தே
யித்தாற் குருகூ ரெழில்மாலை—ஒத்தாய் நீ
என்றே புகன்றாளவ் வேந்திழையைத் தானோக்கி
அன்றோ ரிகுளை யடுத்து

குருகூர் ஆதிநாதனுக்கு விக்ரஹத்தில்-ஸ்ரீ பூமி நீளை என்னும் முத்தாரம். இகுளை—தோழி.

204 வாளிபோற் கண்ணாட்கு வள்ளைவா யொண்டாள
வாளி புனைந்தோர் மடமாதிவ்—வாளியிவள்
கண்ணொளியா னன்றாய்க் கறுக்கின்ற தென்றணிந்தாள்
வெண்வைரத் தோடும் விரைந்து

205 மருங்கு வளைய வளர்முலையி னாட்குக்
கருங்குவளை போன்றவிரு கண்ணில்—நெருங்கிப்
புதியமை தீட்டினளோர் பூங்குழலா ளன்று
வதுவைநா ளென்றே மதித்து

206 மட்டு நிறைந்த மலர்க்கணையான் றன்னைமுனம்
அட்டகுளக்கண்ணோன் றையுறவே—பொட்டிட்டாள்
கொற்ற விசயன்பாற் கொண்ட மயலாட்கு
மற்றொரு மின்னாள் மகிழ்ந்து

207 சுகந்த மலருடனே சூடாமணியுஞ்
சகந்தருநல் லுந்தியுளான் றங்கைக்—குகந்தொருத்தி
சூட்டியுமற் றோரவையேன் சூட்டவில்லை யென்றுரைப்பார்
காட்டளிகள் மொய்த்திடவே கண்டு

208 அந்தணர்க ளாசிசொல ஆம்பல் லியமுழங்கப்
பைந்தொடியார் யாழொலிபோற் பாடவே—சந்தாஞ்சேர்
மங்கைமலர்க் கை பற்றி மங்கலிய நாண்பூட்டித்
தங்குவகை கொண்டான் பார்த் தன்

209 விற்பிடித்த கையால் விசயன் மனைவிசாண்
கற்பிடித்து வைத்தானக் காலத்திற்—பொற்பதத்திற்
பூட்டுஞ் சிலம்பே புலம்பினமென் றுண்மலர்க்கு
வாட்டமுறு மென்றே மருண்டு

கல்—அம்மி.

210 மங்கலியம் பூண்ட மடமான் சுபத்திரையும்
வெங்கனலி லிட்டனனல் வெண்பொரிகள்—அங்கவைநம்
பார்மடந்தை யாசி பகரச்செவ் வாய்திறந்த
சீர்மையெனத் தோன்றினவே சேர்ந்து

211 சுபத்திரைசே ரானந்தத் தொல்கடலில் மூழ்கிச்
சுபத்திரைபாற் பார்த்தன் சுகித்தான்—நபத்தில்
இரவினிரு ளோட்ட விரதத்தி லேறி
இரவியும் வந்தா னெழுந்து

நபத்தில்—ஆகாசத்தில்.

கண்ணபிரானுதவியால் அருச்சுனன் சுபத்திரையை மணந்து தன்னூருக்கு மனைவியுடன் சேர்ந்த பிறகு அயலிடம் போயிருந்த பலராமன் தெரிந்து வந்து பார்த்தனைத் தொலைத்து விடுகிறேனென்று சினந்தெழும் போது

கண்ணபிரான் கூறல்.

212 கொற்றத் தனஞ்செயனைக் கூடி யுலோகமெலாம்
வெற்றி பெற முயன்றால் வெல்லுமோ? நற்றமைய!
அம்புவி யில்துங்க வரியோ டிகல்புரியச்
சம்புவினா லாமோ? நீ சாற்று

தனஞ்செயன்—அருச்சுனன்; அக்கினி. உலோகம்—உலகம்; பூலோகம். அரி—சிங்கம்—மஹாவிஷ்ணு. சம்பு—நரி; சிவன்.

புனல் விளையாட்டில்

213 மீனேர் விழியாடன் மெல்லியதா மாடைதனைத்
தானே நனைத்துத் தனஞ்செயனும்—மானே!
கலையெங்கே யுற்றதெனக் காரிகையும் நீதான்
கலையென்றே புல்லினாள் கண்டு
மானுக்குக்கலை புருஷமிருகம்—

214 வாரிசத்தைக் கொய்தேயம் மைக்கண்ணாள் முன்னிலையிற்
சீரியனுங் காட்டச் சிறுமியுமவ்—வாரிசத்தைக்
கார்க்குவளை யென்றிடவக் காளை நகைத்தவுடன்
சீர்க்கமல மென்றாள் தெரிந்து
மைக்கண்ணின் ஒளியால் கருங்குவளை யென்ன நகைத்தவுடன்
பல்லொளியால் கறுப்பு மாறிவிட்டது.

25—வது பட்டம்.

வானமாமலை " சின்னக்கலியன் ராமானுஜ ஸ்வாமி " திருநாட்டுக்
கெழுந்தருளின தினத்தில் பாடிய விருத்தம்.

215 திகழுசிரீ முகவருடச் சிங்கமாதத்
தினகரநாளிருட்பக்கச் சட்டியின்பாப்
பகர்கலியனுடு வமையு நன்னாள் தன்னிற்
பகனடுவிற் பரவாசு தேவனார்தம்
நிகரினகர் வரவிடுத்த சிரீமுகந்தான்
திகழ்வருடமென்றெண்ணிக் கலியனென்னும்
புகழ்முனிவன் திருமாலூர் யாவும் போற்றிப்
புக்கான் விண்ணூர் மாலைப் போற்றத்தானே

ஸ்ரீமுகம்—கடிதம்; ஓர் வருஷம். இன்பா பகர் கலியன் உடு = இனிய திருமொழி செய்த திருமங்கையார் நக்ஷத்திரமான கார்த்திகை.

சித்திரகவிகள்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் வடபத்திர சாயி பேரில் நடுவெழுத்தலங்காரம்

ஆசிரிய விருத்தம்.

216 அண்டரம் போதியை ததிமதிக்குங்கருவி
அரிதான வோர்மரம்வேள்
அளவிலா வித்தைதனை யன்பாயளித்தகுரு
ஆலயமிவற்றி னடுவிற்
கண்டநல் வரிசினக்குப் பெயர்தரித்தினிக்
காண்குநாலுன்கெழுத்தைக்
காண்டீவனுக் கூர்ந்து பெண்வடிவமாச்செய்து
கண்வளர்ந்தட்டுமாலே
கொண்டவ கலத்திலே வைத்தெய்து மேய்த்திடக்
கோலவத் தத்தெடுத்தாய்
கோகன னிரணிய வினாயகன் வாசவன்
கூடியே போற்ற மடுவில்
அண்டச மறுத்த ருளினாலானை காத்தவா!
அடியேனை யாட்கொள்ளுவாய்.
ஐந்தரு நிகர்த்ததரு வெங்குநிறை தென்புதுவை
ஆதியே! யமாரேறே!

(அண்டர்—தேவர். அம்போதி—கடல். ஐ—கபம். ததிமதிக்கும் கருவி-மத்து ஓர் மரம் பாதிரி. வேள்—மாரன். குரு—ஆசான். ஆலயம்-கோயில். பரி. யாயப்பதங்களின் நடுவெழுத்துக்கள் (வடபத்திரசாயி) நாலுன்கெழுத்து தேர், கல், கம், மது. பாரி, மான், ஆன், கோல். காண்டீவனுக்கூர்ந்தது தேர்; பெண் வடிவமாகச்செய்தது கல், கண்வளர்ந்தது கம்—ஜலத்தில்; அட்டது மதுவென்னும் அசுரன், திருமார்பில் வைத்தது பாரி—எய்தது மான். மேய்த்திட ஆன், அத்தத்தெடுத்தது கோல். இரணியவில் நாயகன்—மேருவை வில்லாகவுடைய பரமசிவன். அண்டசம்—முதலே அருளினால் ஆனை காத்தவா.)

சித்திரகவிகள்.

திருவேங்கடமுடையான்பேரில்

மாலை மாற்று.

217 நேதநாதிப! சீரகயாதவா!
தீதமோகன வாடவ! மாதவா!
வாதமா வடவா னகமோதகீ!
வாதயாகர சீபதிநாதநே!

நே—அன்பு. வடவால் நகம் (வால்—பிரகாசம். நகம்—மலை பிரகாசமான வடமலை;) திருவேங்கடமலை.

ஸ்ரீரெங்கநாதன் பேரில் நிரோஷ்ட வெண்பா.

218 அரங்கத் தணையணையி லண்டியே யண்டர்
தாங்கக் கடற்ற ரணியார்—சிரங்களினால்
ஏத்திடநன் னித்திரைசெய் யெந்தாயடியேனைக்
காத்திடலே நின்றன் கடன்

நிரோஷ்டம்—உதடு ஒன்றோடொன்று ஒட்டாமலும், குவியாமலுமுள்ள எழுத்துக்களான உ ஊ—ஒ—ஓ—ஔ ஷை. உயிர்மெய்யெழுத்துக்களும் ம—ப வ. இவ்வெழுத்துக்களும் வாராமல் பாடுவது.

தென்திருப்பேரை மகரநெடுங் குழைக்காதர்பேரில் மும்மண்டில வெண்பா.

A.

219 மாதவா! பேரன்பா! மாயா! தென்பேரையில்வாழ்
சீதா! வில் மாரனெனுஞ் சேயீன்றோய்!—மாதயவாய்ச்
சீரியரை நாயேனுஞ் சேர்வான் முன் னளினிலிப்
பாரினையுண் வாயா! கண் பார்

B. பேரன்பா மாயாதென் பேரையில்வாழ் சீதா! வில்
மாரனெனுஞ் சேயீன்றோய்! மாதயவாய்ச்—சீரியரை
நாயேனுஞ் சேர்வான்முன் னளினிலிப் பாரினையுண்
வாயா! கண் பார்! மாத வா!

C. மாயா! தென் பேரையில்வாழ் சீதர! வில் மாரனெனுஞ்
சேயீன்றோய்! மாதயவாய்ச் சீரியரை—நாயேனுஞ்
சேர்வான்முன் ஞானிலிப் பாரினையுண் வாயா! கண்
பார் மாதவா! போன் பா!

இதனைத் திரிபங்கி யென்றும் சொல்வார்

அஷ்ட நாகபந்தம்.

வெண்பா.

220 சீதரா! மாலே! திருவனந்த மாபுர
மாதவா! மாயா! வரதா! தா—மோதரா!
மூலனே! வாழுமோர் மான்முத்தி யேதாநீ
வாலரா மஞ்ச வா!

கமலபந்தம்.

221 சால நலசீலத் தனிச்சார்ஜாசர்கோன்
கோலவெளிவிழாக் கொண்டாற்போல்—ஞால
மினு மிருபத் தைந்தாண்டாண் டெங்குஞ்சீ ரோங்கிக்
கனிவு மிகவே வாழ்க

இரு பத்தைந்து—இரு பத்தைந்து—ஐம்பது—நாடு

சுழிகுள பந்தம்

222 நேய தூல நலாகனே!
நேக லாபம யூரனே!
நேர யூக சுரேசனே!
நேசரே துதி தாயனே!.

வானமாமலை மடம் 23-வது பட்டம் சடகோபராமாநுஜஸ்வாமி பேரில் இரத பந்தம்

வெண்பா.

உள்ளுற்றார்க் கென்னாளு மோதுபா மானந்தங்
[illegible]ள்வதும லாற்சீரிங் கோங்கிடுமால்—வெள்ளைப்
[illegible]டயோன்றன் கந்தப் பதமலர்க்கோர் தொண்டன்
[illegible]கோப யோகிவான் றாள்.

[illegible]ளும்—(எல்நாளும்) சூரியன் உள்ளளவும்
[illegible]ளை—சங்கு.



திருவாங்கூர் மூல மகாராஜாப்பேரில்

கோமூத்திரிகாபந்தம்.

சேரனே! யனதான சுசீலனே!
ஆரநேய வுதார சுவேலவா!
வீரநீதி சமூக நமீசகா!
கேரளாதிப மூலநரேசனே!

சே	ர	னே	ய	ன	தா	ன	சு	சீ	ல
ஆ	ர	நே	ய	வு	தா	ர	சு	வே	ல
வீ	ர	நீ	தி	ச	மூ	க	ந	மீ	ச
கே	ர	ளா	தி	ப	மூ	ல	ந	ரே	ச